padippakam

# அகதி

இதழ் 8 - செப்டம்பர் 1995.

- அரசியல் யாப்பு சீர்திருத்தமும் வடக்கு முஸ்லிம்களும்
- அரசியல் தீர்வில் வடமாகாண முஸ்லிம்களின் அபிலாஷைகள்
- வடமாகாண சிறுபான்மை முஸ்லிம்களின் நல உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாற்று ஆலோசனைகள்
- மூன்றாவது ஈழப்போரும் வடமாகாண முஸ்லிம்களும்

விலை ரூபா பத்து

**எம்முடைய தாயகமும் வடக்கே**

படிப்பகம்

# நாம் சரியாக இருந்தால்

இஸ்லாம் தான் முஸ்லிம்கள் என்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கியது. அதுதான் முஸ்லிம்களை உலகிலேயேய சிறந்த சமுதாயமாக மாற்றியதும், உலக சாம்ராஜ்ஜியங்களை எல்லாம் இவர்களின் ஆட்சிக்குள் கொண்டு வந்ததுமாகும்.

முஸ்லிம்களுக்கு அறிவையும், ஒழுக்கத்தையும் அள்ளிக் கொடுத்ததும் இஸ்லாமே. கௌரவத்தையும் மரியாதையையும் தந்து மனோதிடத்தையும் பலத்தையும் தந்ததும் இஸ்லாமே. அதுவே நாடுகளை வென்று ஆட்சிகளை நிறுவிய வீரச் செம்மல்களை உருவாக்கியது. அறிவுக்கும் இலக்கியங்களுக்கும் நவீன ஞானங்களுக்கும் அளவிட முடியாத அரும்பணியாற்றி அறிவுக் களஞ்சியங்களைத் தந்துதவுவதும் இஸ்லாமே.

உண்மையான சமத்துவத்தையும் மெய்யான நீதியையும் உலகில் முதன்முதல் நிலைநாட்டியது இஸ்லாமிய சட்டங்கள் தாம். எல்லோரும் நல்ல காரியங்களிலும் இறைபக்தியிலும் ஒத்துழைக்க வேண்டும். நல்லதை ஏவி தீயதை விலக்குவது அவசியம் என வலியுறுத்தியது இஸ்லாமிய சட்ட அமைப்பு ஒன்றுதான். இன்றைய நவீன சட்டங்கள் இன்று வரை இஸ்லாமிய சரீஅத் கொண்டு வந்த சட்டங்களிற் சிலவற்றையே எடுக்க முன் வந்துள்ளன.

முஸ்லிம்கள் இஸ்லாமிய சட்டங்களைப் பற்றிப் பிடித்துவந்த காலம் முழுவதும் தான் இஸ்லாம் தன் பொறுப்பை அழகாக நிறைவேற்றி வந்தது. இவர்கள் இவ்வரிய திட்டத்தை கைவிட்டதும், இவர்களின் முன்னேற்றப்பாதை தவறி விட்டது. அடிமைத்தனம் இவர்களை இறுக அணைத்துக் கொண்டது. எனவே இஸ்லாத்துக்கு முன்பு மனிதர் இருந்த இருண்ட நிலைக்கே ஓடோடிப் போய் விட்டார்கள் மற்றவர்களுக்கு தலை வணங்கும் வலுவிழந்த மக்களாக மாறினார்கள். இந்நிலையில் அநியாயத்தைத் தடுத்தக் கொள்ளவோ எதிரியை எதிர்க்கவோ இவர்களால் எப்படிச் சாத்தியமாகும்.

முந்தைய முஸ்லிம்கள் முற்றாக அல்லாஹ்வை நம்பினார்கள். எனவே அல்லாஹ் அவர்களுக்கு இப்பூவுலகில் வசதிகளைக் கொடுத்தான்.சொற்பமான தொகையினரான அவர்களுக்கு அப்படிச் செய்ய முடியுமாயின் பெருந்தொகையாகவுள்ள நாம் சரியாக நடப்பது நம் கடமை.

-அஷ்ஷஹீத் அப்துல் காதிர் அவ்தா (ரஹ்)

# அகதி


# அகதி

இதழ் 8: செப்டம்பர் 1995



தொடர்புகள்:

வடக்கு முஸ்லிம்களின்
உரிமைக்கான அமைப்பு,
15 A, ரோஹினி வீதி,
கொழும்பு -6,
ஸ்ரீ-லங்கா.

தொலைபேசி : 586660
பெக்ஸ் : 586660



**"AHATHI"**

**Published by
NORTHERN MUSLIMS'
RIGHTS ORGANIZATION,
15A Rohini Road,
Colombo - 6
Sri - Lanka**



இச்சஞ்சிகையில் வெளியாகும்
ஆக்கங்களுக்கு அவற்றை
எழுதியவரே பொறுப்புடையவர்கள்


## அரசியல் யாப்பு சீர்திருத்தமும் வடக்கு முஸ்லிம்களும்

இந்நாட்டில் கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேல் புரையோடிப் போய் உள்ள, இனப் பிரச்சினைக்கு சந்திரிக்கா பண்டாரநாயக்காவின் இன்றைய அரசு தீர்வு காண்பதற்கு முயற்சித்து வருவதனை அதன் நடவடிக்கையின் மூலம் காட்டிக் கொண்டிருக்கிறது.

இந்நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்தே இனப்பிரச்சினையும் ஆரம்பமாகிவிட்டது. இப்பிரச்சினை ஆரம்பத்தில் பெரும்பான்மை சிங்கள மக்களிடத்திலிருந்து சிறுபான்மை தமிழ் மக்கள் தமது உரிமைகள் மறுக்கப்படுவதை உணர்ந்த பொழுது, அதனை பெற்றிட அவர்கள் எடுத்த ஒவ்வொரு முயற்சியும், சாத்வீகப் போராட்டமும் பலனைத்தராத ஒரு நிலையில் காணப்பட்டது.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியும், ஐக்கிய தேசிய கட்சியும் மாறி மாறி ஆட்சி பீடத்தில் அமர்ந்து கொண்டு, தமிழ் மக்களது பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாகக் கூறி பல ஒப்பந்தங்களையும், உடன்படிக்கைகளையும் மேற்கொண்ட பொழுதிலும் அவை அனைத்தும் ஏட்டில் எழுதிய எழுத்துக்களாக கிடப்பில் போடப்பட்டன. ஈற்றில் அது இன்று ஆயுதப் போராட்டமாக வளர்ந்து இந்த நாட்டை உலுப்பிக் கொண்டிருக்கும் பாரிய பிரச்சினையாக ஆக்கிவிட்டிருக்கின்றது.

இந் நாட்டின் மூன்றாவது சிறு பான்மைச் சமூகமாக வாழ்ந்து வரும் முஸ்லிம்களும் இந்த

padippakam



இனப்பிரச்சினைக்குள் சிக்கிக் கொள்ள நேரிட்டதுடன் இவர்கள் மத்தியிலும் பல உயிர் உடமை இழப்புக்களும் ஏற்பட்டதுடன், இவர்களது உரிமைகளும் பறிக்கப்பட்டு அனாதரவாக விடப்பட்ட சமூகமாகவும் ஆக்கப்பட்டார்கள்.

எந்த சமூகம் தன்னிலும் பார்க்க பெரும்பான்மை சமூகத்தில் உரிமைக்காகப் போராடி வருகிறதோ அதே சமூகம் தன்னிலும் பார்க்க ஒரு சிறுபான்மை சமூக மாகிய முஸ்லிம்களை நசுக்க தலைப்பட்டதன் விளைவுதான், இன்றைய வட-கிழக்கு முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவல நிலைக்குக் காரணமாகும்.

இதிலும் குறிப்பாக வடக்கு முஸ்லிம் களின் பாதிப்பு இங்கு கூறத்தக்கதல்ல. இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை வரலாற்றில் வடக்கு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இத் துயரமான சம்பவம் ஏனைய எந்த ஒரு சமூகத்திற்கும், குறிப்பாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் சமூகத்திற்குக் கூட ஏற்படவில்லை என்பதை இங்கு சுட்டிக் காட்டியாகவே வேண்டும்.

இப்பின்னனியில் இன்றைய அரசு மேற் கொண்டுவரும் இனப்பிரச் சினைக்கான அரசியல் தீர்வு யோசனைகள் பற்றி ஆராய வேண்டும்.

இன்றைய அரசானது இனப்பிரச் சினையைத் தீர்த்து வைப்பதற்காக, சகல கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி நீதி, அரசியல் விவகார அமைச்சரான பேராசிரியர் G.L.பீரிஸ் தலைமையில் தெரிவிக் குழு ஒன்றை நியமித்துள்ளது. இந்நாட்டி லுள்ள சகல கட்சிகளிடமிருந்தும், விரும்பும் அமைப்புக்கள் தனி நபர்களிடமிருந்தும் ஆலோசனைகளைப் பெற்று, இந் நாட்டின் சகல மக்களினதும் உரிமைகளை பாதுகாக்கக் கூடிய வகையில் அரசியல் யாப்பில் சீர்த்திருத்தம் செய்து இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கலாம் என்ற அடிப்படையில் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

இந்த அடிப்படையில் பல கட்சிகளும் அமைப்புக்களும் தெரிவுக்குழுவிற்கு தங்களது யோசனைகளை முன்வைத்தன.

ஆனால் இதில் உள்ள மிகவும் வேதனைக்குரிய விடயம் யாதெனில் எந்த ஒரு சிங்கள, தமிழ், முஸ்லிம் கட்சிகளும் வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினையை தெளிவாக விளங்கி வடக்கு முஸ்லிம்களை முழுமையாக பாதுகாக்கக் கூடிய வகையில் அவர்கள் இழந்து நிற்கும் உரிமைகள் மீளக் கிடைக்கக் கூடிய வகையில் பேசவுமில்லை, எடுத்துரைக்கவுமில்லை.

இச்சந்தர்ப்பத்தில் வடக்கு முஸ்லிம்கள் இழந்து நிற்கும் உரிமைகளை மீட்டெடுப்பதற் காக முயற்சித்து வரும் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு (NMRO) தனது செயல் திட்டங்களில் ஒன்றாக அரசியல் தீர் வொன்றிற்கு வடமாகாண முஸ்லிம்களின் அபிப்பிராயத்தை ஒன்று திரட்டி அதற்கு அவர்களை தயார்படுத்த வேண்டியதையும் கொண்டிருப்பதால் அதனை நடைமுறைப் படுத்த வேண்டியது தற்போதைய காலத்தின் உடனடித் தேவையென்பதை உணர்ந்து அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டது. தங்கள் கையில் தவழும் **'அகதி'** இதழானது வ.மு.உ. அமைப்பு இது விடயமாக மேற் கொண்ட நடவடிக்கைகளையும், அது அடைந் துள்ள வெற்றிகளையும் எதிர்நோக்கிய பிரச்சினைகளையும் எதிர்காலத்தில் எதிர் நோக்கும் சவால்களையும் விளக்கிக் கூற உள்ளது.

இந்த இதழானது வடக்கு முஸ்லிம் களின் அரசியல் மற்றும் உண்டான உரிமைப் போராட்டத்தின் ஒரு கட்டத்தை விளக்கும் சிறப்பு இதழாகும்.



படிப்பகம்

padippakam



# எண்ணக் குமுறல்கள்

'அகதி' எனும் பெயர் கொண்ட சஞ்சிகையை பார்வையிட்டேன். வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் இன்றைய பிரச்சினைகள் மற்றும் அவர்கள் முன்னர் வாழ்ந்த இடங்கள், குடிசன மதிப்பீடு, கல்விப் பிரச்சினைகள் போன்ற பல விடயங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. இன்றைய கால கட்டத்தில் 'அகதி' சஞ்சிகை வெளிவருவது மிகவும் முக்கியமானதாகும். இம் முயற்சியின் வெற்றிக்கு அல்லாஹ் துணை நிற்பானாக.

எல். ஜிஸ்தி,
ஹுனுப்பிட்டிய, வத்தளை.

***

தங்களால் வெளியிடப்படும் 'அகதி' ஆறாவது இதழ் பார்த்தேன். அதைப் படிக்கும் போது நம் சமூகத்திற்கு ஏற்பட்ட தீங்குகளை நன்கு அறிவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. இந்த சஞ்சிகை எந்த இடையூறுமின்றி தொடர்ந்து வெளிவரப் பிரார்த்திக்கிறேன். ஏனெனில் நம் சமூகத்திற்கு ஏற்பட்ட துயரமான நிலைகளை பின்னால் வரும் சந்ததிகள் அறிவதற்கு இச் சஞ்சிகை முக்கியமானதாக அமையும் என நினைக்கிறேன்.

வாழைச்சேனை முர்ஷித்.

***

தங்களால் 'அகதி' சஞ்சிகை வெளிவருவதை அறிந்து மகிழ்ச்சி, ஏனெனில் புலம் பெயர்ந்த மக்களின் இன்ப துன்பங்களை வெளிக் கொணரும் பொருட்டு தங்களால் வெளியிடப்படும். சஞ்சிகை ஒன்றே இவ்வரிய சேவையைச் செய்கின்றது.

ஏ.பி. சாஜஹான், எஸ்.எல். ஹாஜியார் வீதி
வாழைச்சேனை.

***

பாதிக்கப்பட்டுத் தவிக்கும் எமது சகோதரர்களின் அவலங்களை அவர்களாலேயே வெளிக் கொணரும் அரும்பெரும் முயற்சியின் வெளிப்பாட்டின் ஒரு முக்கிய பகுதியே இவ 'அகதி' இதழாகும். நாம் அறியாத, கட்டாயம் அறிய வேண்டிய, பல உண்மைகளை அறியச் செய்கிறது. சரியான ஒரு முஸ்லிமுக்கு இதை வாசிக்கையில் உள்ளம் உருகாதிருக்க முடியாது. இதை ஒவ்வொரு முஸ்லிமும் படித்துணர வேண்டும்.

எம். ஆர். ரியாஸ் முகம்மது
அட்டுலுகம.

***

அகதிகளால் வெளியிடப்படும் 'அகதி' எனும் சஞ்சிகை பார்த்தேன். நாம் எல்லாம் நடைப்பிணமாய் நடமாடும் இவ்வேளையிலும் பல இன்னல்களுக்கும் கஷ்டங்களுக்கும் மத்தியில் சிரமம் பாராது சீராக வளம் வரும் அகதியின் சேவை பாராட்டுக்குரியதே. நாம் எல்லாம் சொந்த மண்ணில் மீண்டும் கால் வைக்கும் வரை தொடர்ந்தும் அதன் பணி நிலைத்திருக்க இறைவனை வேண்டுகிறேன்.

எஸ்.எம்.ஏ. காதர்
ரியாத்
சவூதி அரேபியா.

***



படிப்பகம்

padippakam



புலிகளால் வெளியேற்றப்பட்டு பல இன்னல்களுடன் வாழ்ந்து வரும் அகதிகளின் கண்ணீரை எழுத்துருவில் வடிக்க ஒரு இதழ் இல்லாத நேரத்தில் அகதி வந்து நிவர்த்தி செய்தான். இதழ் 6ல் "வடமாகாண முஸ்லிம் அகதிகளின் வரலாற்று பொருளாதார ரீதியான நோக்கு" எனும் கட்டுரையை எழுதிய முகம்மது ஜான்சின் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

**எம்.எல்.எம். ஸபீல், ரியாத்**
**சவூதி அரேபியா.**

***

'அகதி' என்று பெயர் தாங்கி வரக்கூடிய இதழை வாசித்தேன். அகதிகளின் உண்மை நிலைகளை அறிவதற்கு இவ் இதழ் துணைபுரிகிறது. இவ் இதழ்களானது அகதிகளின் உள்ளங்களை பூரிப்படையச் செய்கிறது. அகதிகளின் நிலையை அறிவதற்கு தொடர்ந்து இவ் இதழ்கள் வெளிவர வேண்டும்.

**எம்.றமீஸ்– பரீத்.**
**திகலி– ஏத்தாளை**

***

வடக்கு முஸ்லிம் அகதிகளை ஒரு புதிய– மிகச்சரியான கோணத்தில் சிந்திக்க வைக்க முயற்சித்திருக்கின்றீர்கள். மிகவும் தாமதமாக 'அகதி' யைப் பற்றித் தெரிந்து கொள்ள நேர்ந்ததையிட்டு வருந்துகின்றேன்.

**எம்.ஏ.றிஸ்வி**
**தெஹிவளை.**

***

ஒவ்வொரு சமூகத்தினதும் திருப்பு முனை அதன் பேனாமுனையில் தங்கியிருப்பதை அவதானிக்க முடிகிறது. இந்த வகையில் 'அகதி' சஞ்சிகை அகதிகளுக்கு மாத்திரமல்லாமல் இலங்கை முஸ்லிம்களது திருப்பு முனையாகவும் அமைய வேண்டும். கொமியுனிசம் தோற்றுப் போனாலும் அதன் வெற்றிக்குக் காரணம் எழுத்துப் பணி அதே போல் இலங்கைத் தமிழர்களின் போராட்டத்திற்கு எழுத்துத்துறை கணிசமான பங்களிப்பை வழங்கி வருகிறது. இந்த வகையில் அகதி ஆரோக்கியமான எழுத்தாளர்களையும் சிந்தனையாளர்களையும் உருவாக்கி சமூகத்திற்கு காத்திரமான பணியை மேற் கொள்ள வேண்டும். இதற்காக அனைவரும் பிரக்ஞையுடன் செயற்படுவோமாக.

**ஏ.எல்.ஸுபைர் ஜே.காரியப்பர்**
**நழிமியா வளாகம்**
**பேருவலை.**

***

என் கனவுகளின் நினைவால் வந்து நின்று கொண்டிருக்கும் 'அகதி'யே, உன்னைக் காணும் நேரமெல்லாம் ஒரு புதிய உணர்ச்சியலை என் இதயத்தில் மோதிச் செல்கின்றது. . ஓ! 'அகதியே! இருட்டைக் கடந்து வந்த பிறகுதான் அதன் அடர்த்தியை அறிய முடிகிறது. அதே போன்று 'அகதி' யே உன்னை வாங்கி வாசித்த பிறகுதான் உன் தரத்தின் கவனத்தை என்னால் அறிய முடிகிறது. அகதி மக்களின் கண் திறக்க வந்த விடி வெள்ளியே! காலமெல்லாம் உன் ஒளியில் நான் பாதை காண என்றும் உனக்காகக் காத்திருக்கின்றேன்.

**வடக்கிளைஞன்**
**ஹபீழ். எம். முஸ்தபா**
**றசூல்புதுவெளி.**

***



படிப்பகம்

padippakam



# வடக்கு முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான வேலைத்திட்டம்

வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் பற்றி அவர்களுக்கு தெளிவற்ற சிந்தனைகள் காணப்படுவது பற்றி 1994 நவம்பரில் வ.மு.உ. அமைப்பினால் (NMRO) பேராதனைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வடபகுதி முஸ்லிம் மாணவர்களைக் கொண்டு வடக்கு அகதிகள் மத்தியில் (புத்தளம் மாவட்டத்தில்) நடத்தப்பட்ட ஆய்வின் பொழுது தெளிவாகத் தெரிந்தது. (அகதி இதழ் 7. 1995ல் ஆய்வின் முழு விபரமும் தரப்பட்டுள்ளது)

இந்நாட்டில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்காக எடுத்து வரும் நடவடிக்கையின் போது நாம் நமது நிலை குறித்து தெளிவற்ற அரசியல் சிந்தனையில் இருப்பதானது எதிர்காலத்தில் நாமும் நமது சந்ததியினரும் பாரிய பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும்.

எனவே இந்த மக்கள் மத்தியில் அவர்களது அரசியல் எதிர்காலம் பற்றி தெளிவான ஒரு கண்ணோட்டத்தை ஏற்படுத்துவது அவசியமாகிறது.

இதற்கு வடக்கு முஸ்லிம் மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன், இம் மக்களால் அடையாளப்படுத்தப்படும் உரிமையை வென்றெடுப்பதற்கும் தேவையான நடவடிக்கையை மேற்கொள்வதென இவ்வமைப்பு தீர்மானித்தது.

பின்வரும் அடிப்படையில் அதற்கான வேலைத்திட்டத்தை அமைத்தது.

1. அகதிகள் செறிந்து வாழும் பகுதியில் இது பற்றிய கலந்துரையாடல்களை மேற்கொண்டு வடக்கு முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளை அடையாளம் காண வேண்டும்.
2. வடக்கு முஸ்லிம்களது முக்கிய பிரமுகர்கள், கல்விமான்கள், அரசியல் அறிவுள்ளோர்கள் ஆகியோரை அழைத்து ஒரு செயலமர்வின் (Work Shop) போது வடக்கு முஸ்லிம்களின் அபிலாசைகள் அரசியல் உரிமைகள் பற்றி இறுதி முடிவு, எடுக்கப்பட வேண்டும்.
3. அம் முடிவு செயலமர்வுக்கு சமூகம் தந்த பெரும்பான்மையினரால் ஏற்றுக் கொள்ளப் படுமாயின் அதனை நடை முறைப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதற்கு வ.மு.உ. அமைப்பிற்கு (NMRO) மக்கள் ஆணையைப் பெறப்படல் வேண்டும்.
4. எடுக்கும் நடவடிக்கை ஒவ்வொன்றையும் கை ஏடுகள், கை நூல்கள், குழுக் கலந்துரையாடல்கள் மூலம் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.
5. இனங்காணப்பட்ட எமது அரசியல் உரிமைகளை வென்றெடுக்க தேவையான நடவடிக்கையை சமகால அரசியல் நீரோட்டத்திற்கேற்ப படிப்படியாக மேற்கொள்ள வேண்டும்.

**சந்தா விபரம்**

தனிப்பிரதி ரூபா 10/-
ஆறு இதழ்களுக்கான சந்தா ரூபா 72/-
M.O அனுப்பும்பொழுது AHATHI' NORTHERN MUSLIMS' RIGHTS ORGANIZATION என்ற பெயருக்கு SUB POST OFFICE HORETUDUWA MORATUWA என்று குறிப்பிடவும்.



படிப்பகம்

padippakam



# வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினை தனித்துவமானது என்பதற்கான காரணிகள்

1. வடமாகாண முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட முறை ஒரு கொடூரமான முறையாகும். ஒரு குறுகிய கால அவகாசத்தில் ஆயுத முனையில் சொத்துக்கள் யாவும் பறிக்கப்பட்ட நிலையில் அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். வெளியேறும் போது கடுமையான வார்த்தைப் பிரயோகங்களால் இம்சிக்கப்பட்டார்கள். (ஆதாரம்- அகதிகள் கருத்து பொருளாதார இழப்புப் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு) இத்தகைய நிலை இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள- சம்பந்தப்படாத எந்த ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கும் ஏற்படவில்லை.

2. இன்று அவர்கள் வாழ்விட உரிமை மறுக்கப்பட்டு தம்முடையதல்லாத ஒரு பிரதேசத்தில் வாழ்கிறார்கள். இது அகதிகளாக்கப்பட்டு இந்தியாவில் அல்லது வேறு ஒரு நாட்டில் அகதிமுகாம்களில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நிலையிலிருந்து வேறுபட்டது.

3. கிழக்கு மாகாணத்தில் இனப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட மூன்றாவது சமூகமான முஸ்லிம்கள் அதிகமாக முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்தின் கீழ் உற்சாகமான அரசியல் ஈடுபாடு கொண்டவர்கள். இவர்களது அரசியல் ஈடுபாடு அரசியல் உரிமைகளையும் குறிப்பாக தமது பாதுகாப்பையும் மையமாகக் கொண்டது. இத்தகைய அரசியல் ஈடுபாடு L.T.T.E. யின் தனி நாட்டுக் கோரிக்கைக்கு சாதகமான தன்மையைத் தோற்றுவிக்கும் பண்பைக் கொண்டதாக இல்லை. அதே நேரம் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் இத்தகைய ஒரு அரசியல் ஈடுபாடு கிழக்கு மாகாண சனத்தொகை அடர்த்தியை பொறுத்தமட்டில் தேவை யானதும் தவிர்க்க முடியாததுமாக அமைந்து விட்டது.

வடமாகாண முஸ்லிம்களோ கிழக்கு மாகாண முஸ்லிம்களைப் போன்று உற்சாகமான அரசியல் ஈடுபாடு கொண்டவர்களல்ல. வடமாகாணத்தில் இவர்களது குறைவான சனத்தொகையும், முஸ்லிம் மக்கள் வசிக்கும் பிரதேசங்கள், கிராமங்கள் என்பனவற்றின் புவியியல் பரம்பற் தன்மையும் இதற்குக் காரணமாகும்.

4. கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எப்போதும் தம்மை தனியாக வைத்துக் கொள்ள இயலுமை உடையவர்களாகக் காணப்பட வடமாகாண முஸ்லிம்களோ அதனைப் பற்றிச் சிந்திப்பதற்கு கூடத் தூண்டப்படாத நிலையைக் காணலாம். இது வடமாகாண முஸ்லிம்கள் வடமாகாண தமிழ் மக்களுடன் இணைந்த அரசியல் ஈடுபாட்டைக் கொண்டிருந்தார்கள் என்பதைக் காட்டுகின்றது. வடமாகாண முஸ்லிம்களின் அண்மைக்கால அரசியல் போக்கு இனரீதியாக சிந்திக்கப் பட்டதாயினும் இது உறுதியற்றதும் நிரந்தரமற்றதுமான நிலைப்பாடு என்றே கூற முடியும்.

> சுதந்திரமாய் இருக்க உறுதி கொண்ட மனிதன் மீது அடிமைத்தளையைப் பூட்டுவதை விட, நிலையான மலையை அடியோடு பெயர்த்து அப்பால் எறிவது எளிதானது
>
> -ராபாட்-



படிப்பகம்

padippakam



# அரசியல் தீர்வில் வடமாகாண முஸ்லிம்களின் அபிலாஷைகள்

## கருத்தரங்கு I

வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் பற்றிய முதலாவது கருத்தரங்கு (கடந்த புனிதமான ரமழான் மாதம் பிறை 26ல்) 27.02.1995 ஞாயிறு மாலை புத்தளம் சாஹிராக் கல்லூரியில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் புத்தளம் மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களின் தலைவர்கள், ஆசிரியர்கள் சமுதாய முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கிற்கு வ.மு.உ. அமைப்பின் பொருளாளர் M.M.அமீன் (D.O) தலைமை தாங்கினார். கருத்தரங்கில் வ.மு.உ. அமைப்பின் தலைவரும், பேராதனைப் பல்கலைக்கழகப் புவியியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி S.H ஹஸ்புல்லாஹ் அவர்களால் **"வடமாகாண முஸ்லிம்களின் எதிர்காலம்"** என்ற தலைப்பில் விஷேட உரை நிகழ்த்தப்பட்டது.

இவ்வுரையில் அவர் இது வரைக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் வடமாகாண முஸ்லிம்களின் தனித்துவமான பிரச்சினையை எவ்வாறு அணுகியுள்ளன என்பதை விபரமாக விளக்கிக் கூறியதுடன், இவ் ஆலோசனைகள் நிச்சயமாக வடமாகாண முஸ்லிம்களுக்கு போதிய முழுமையான பாதுகாப்பைத் தரக் கூடியதல்ல என்பதையும் எடுத்துக் கூறினார்.

இதன் பின் நீண்ட நேரம் சபையோரால் இவ்விடயம் சம்பந்தமாக கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இறுதியாக இதுவரைக்கும் இனப்பிரச்சினைக்காக முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் திட்டங்கள் என்பன வடமாகாண முஸ்லிம்களின் தனித்துவமான பிரச்சினையை உரிய முறையில் அணுகவில்லை எனவும், அவை வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்யவும் அவர்களுக்கு அரசியல் பாதுகாப்பு அளிக்குமளவுக்கு சக்தி வாய்ந்தனவல்ல எனவும் ஏகமனதாக முடிவுக்கு வந்தனர்.

**இக்கலந்துரையாடலின் இறுதியில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது**

1. தற்போது இடம் பெற்று வரும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையின் போது வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினையும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.
2. வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினை அரசியல் சார்பற்ற ஒரு தகுதி வாய்ந்த குழுவினால் ஆராயப்பட வேண்டும்.
3. வட மாகாண முஸ்லிம்களின் பிரச்சினை சில விஷேட பண்புகளைக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் இப்பிரச்சினை வடமாகாண முஸ்லிம்களுக்கூடாகவே அணுகப்பட வேண்டும். இது யாரால் முன்வைக்கப்படும் ஆலோசனையாக இருப்பினும் அது வடமாகாண முஸ்லிம்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட குழுவினரோடு கலந்துரையாடப்பட்டு அவர்களது திருப்தியைப் பெற்றிருக்க வேண்டும்.
4. மேற்படி கருத்தரங்கில் **"வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம்"** என்ற தலைப்பில் ஆராயப்பட்டவைகள் வடமாகாண முஸ்லிம்களின் ஏகோபித்த கருத்தாக அமைவதற்காக வேண்டி இன்னும் பல இடங்களில் கருத்தரங்குகள் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு முடிவு பெறப்பட வேண்டும்.



படிப்பகம்

padippakam



## கருத்தரங்கு II,III

இக்கருத்தரங்கு புத்தளம் மாவட்டத்திலுள்ள கடையமோட்டை அல் அஸ்வர் முஸ்லிம் பாடசாலையிலும் கற்பிட்டி அல் அக்ஸா கல்லூரியிலும் இரு கட்டங்களாக 19.03.1995 அன்று இடம் பெற்றது.

இக்கருத்தரங்கில் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டு இப்பகுதியில் வாழும் அகதி முஸ்லிம் பிரமுகர்களும், முகாம்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கிற்கு வ.மு.உ. அமைப்பின் பொருளாளர் எம்.எம். அமீன் (D.O)தலைமை தாங்கினார். **'தனித்துவமான வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினை'** எனும் தலைப்பில் எஸ்.எம்.ஏ. நியாஸ் கருத்துக்களை முன் வைக்க அதனைத் தொடர்ந்து **"இதுவரை முன்வைக்கப்பட்ட தீர்வு திட்டங்களில் வடமாகாண முஸ்லிம்களின் அபிலாசைகள் நிறைவேற்றக் கூடியதாக இருந்ததா?"** என்ற தலைப்பில் இவ்வமைப்பின் தலைவர் கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லா அவர்களின் கருத்துக் களைத் தொடர்ந்து **"எவ்வாறான நிலைப்பாட்டை வடமாகாண முஸ்லிம்கள் கொண்டிருக்க வேண்டும்"** என்ற தலைப்பில் மௌலவி பி.ஏ.எஸ். சுப்யான் கருத்துக்களை எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து மக்கள் அபிப்பிராயத்திற்கும் கருத்திற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆர்வத்துடன் மக்களும் பரவலாக தங்களது அபிலாஷைகளை எடுத்துக் கூறினார்கள்.

இறுதியாக இக்கருத்தரங்குகளில் இம் மக்களது அடையாளப்படுத்தக் கூடிய பிரச்சினையாக பின்வருவன அல்லாஹு அக்பர் என்ற நாமம் மேலோங்க ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1. இம்மக்கள் தாம் மீண்டும் தமது வாழ்விடத்திலிருந்து வெளியேற்றப் படாமல் இருப்பதற்கான தேசிய சர்வதேச உத்தரவாதத்தை வேண்டி நிற்கின்றனர்.
2. வடமாகாணத்தில் பரஸ்பர இன ஐக்கியமும் புரிந்துணர்வும், ஜனநாயகப் பாரம் பரியமும் உருவாகும் வரை தமது வாழ்வுரிமையை உத்தரவாதப் படுத்தக் கூடிய இடைக்கால பாதுகாப்பு ஒழுங்கும் அவசியம் என உணர்கின்றனர்.
3. தமது பலவந்தமான வெளியேற்றத்தால் இழக்கப்பட்ட அசையும் அசையாத சொத்துக்களைத் திரும்பவும் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
4. தமக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்கான நஷ்டஈடுகள் நியாயமான முறையில் வழங்கப்பட வேண்டும்.
5. திருப்தியான புனர்வாழ்வு புனர் நிர்மாணத் திட்டங்கள் இம் மக்களுக்காகத் தீட்டப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். அப்புனர் வாழ்வு முயற்சிகளில் அவர்களும் பங்காளிகளாக இருக்க வேண்டும்.
6. வடக்கின் ஒரேயொரு சிறுபான்மையினரான முஸ்லிம்களின் சிறுபான்மைக் குரிய பாதுகாப்பும், அரசியல் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிக்கக் கூடிய சீர்திருத்தங்களும் யாப்பு ரீதியாக செய்யப்பட வேண்டும்.
7. முறிந்து போன தமிழ், முஸ்லிம் உறவைக் கட்டி எழுப்பவும் இனப்புரிந்துணர்வைப் பலப்படுத்தவும் கூடிய கல்வியை ஊட்டலும் அது சம்பந்தமான வேலைத் திட்டங்களையும் செயற்படுத்த வேண்டும்.
8. மீள் குடியேற்றம் வடக்கில் செய்யப்படும் வரை வட மாகாண முஸ்லிம்களினதும் அவர்களின் சந்ததியினரதும் வாழ்க்கை சீரழிந்து விடாமலும் தாயகத்தை அடையும் இம்மக்களின் இலட்சியம் சிதைந்து விடாமலும் இருக்கக் கூடிய வகையில் இன்றைய அகதி வாழ்க்கையில் தாக்கமுள்ள சீர்திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



படிப்பகம்

padippakam



## கருத்தரங்கு IV

இக்கருத்தரங்கு வெள்ளவத்தை 15 A ரோஹினி வீதியில் உள்ள இஸ்லாமிய கல்வி நிலையத்தில் (C.I.S) அமைந்துள்ள வ.மு.உ. அமைப்பின் தலைமையகத்தில் 9.04.1995 அன்று இடம் பெற்றது.

இக்கருத்தரங்கில் கொழும்பைச் சுற்றிலும் உள்ள வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் அதிக அளவில் கலந்து கொண்டனர்.

இக் கருத்தரங்கும் ஏலவே நடத்தப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை ஒத்ததாகவே இருந்தது. கலந்து கொண்ட மக்களில் பெரும் பாலானோர் பல ஆக்கபூர்வமான கருத்துக்களை முன் வைத்தார்கள்.

இக்கூட்டத்தின் இறுதியில் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் நாடளாவிய ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சகல மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கல்விமான்களையும், அரசியல் அறிவும் அனுபவமுள்ளவர்களையும் சமூக சேவையாளர்களையும், அழைத்து ஒரு நாள் 'செயலமர்வு' (Work Shop) ஒன்றை நடத்தி அதில் வடக்கு முஸ்லிம்களின் அரசியல் எதிர் காலம் பற்றி, தெளிவாக ஆராய்ந்து, ஒன்றுபட்ட முடிவுகளை எடுத்து மக்கள் அங்கீகாரத்துடன், தெரிவுக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

> நல்லது சிறந்தது எதையும் சாதிக்க விரும்பினால் எழுந்து முனைந்து செயலாற்ற வேண்டும்.
>
> -அன்னை சாரதா தேவி-

## இனப்பிரச்சினை தமிழினத்தினது மட்டுமல்ல முஸ்லிம்களினதுமே

வடக்கு கிழக்குப் பிரச்சினை தமிழர்களது பிரச்சினை மட்டுமல்ல அது அங்கு வாழும் முஸ்லிம்களது பிரச்சினையும் கூட என்பதை சர்வதேச அரங்குக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியமும், அவசரமுமாகியுள்ளது. காலம் கடந்து கைசேதப்படுவதை விட முன்யோசனையுடன் முஸ்லிம் சமுதாயம் செயற்பட வேண்டும்.

வடக்கு கிழக்குப் பிரச்சினையை தமிழர்களது பிரச்சினையாக மட்டுமே சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அங்கு வாழும் முஸ்லிம்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் சர்வதேச அரங்குக்கு எவராலும் முன் வைக்கப்படாமை குறித்து முஸ்லிம்கள் சிந்தனை செய்து பார்க்க வேண்டும். ஏதும் பிரச்சினை நடந்தவுடன் கூச்சலிட்டு பத்திரிகைகளில் எதிர்ப்புகளை தெரிவிப்பதோடு எமது பணி முடிந்து விட்டது எனக் கருதினால் முஸ்லிம் சமுதாயத்தின் எதிர்காலம் பயங்கரமானதாகவே அமைந்து விடும்.

தற்போது உள் நாட்டிலும், உலகிலும் எங்கும் வடகிழக்குப்பிரச்சினையை தமிழ் மக்களின் பிரச்சினை என்று மட்டுமே கருதி அந்த அடிப்படையிலேதான் பேசப்படுகின்றது. அங்குள்ள முஸ்லிம்கள் பற்றியாரும் சிந்திப்பதாக இல்லை. இதைத் தெளிவுபடுத்தி தீர்வு ஏற்படுத்த முனையும் போது முஸ்லிம்களின் உரிமைகளை கருத்தில் கொண்டதாக அமையும் வகையில் ஏற்ற நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

அமைப்புகள், ஸ்தாபனங்கள் ஒழுங்காக இயங்கினால் மட்டுமே இதனைச் சாதிக்க முடியும் இயக்கங்கள் ஒன்றுபட்டு ஒரே குரல் எழுப்பக்கூடியனவாக இயங்க வேண்டும் இந்த வழிமுறை சகல ஸ்தாபனங்களாலும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்

– முன்னால் அமைச்சர் ஏ. ஸி. எஸ் ஹமீத்



படிப்பகம்

padippakam



# வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் பற்றிய செயல் அமர்வு (WorkShop)

இச்செயலமர்வானது வ.மு.உ. அமைப்பின் பணி மனையில் 22.04.1995 அன்று முழுநாள் நிகழ்ச்சியாக இடம் பெற்றது. காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்ச்சி மாலை 5.00 மணிக்கு நிறைவு பெற்றது.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் கல்விமான்களும் அரசியல், சமூகப் பிரமுகர்களும், பெருமளவில் இதில் கலந்து கொண்டனர். இச் செயலமர்வானது மூன்று அமர்வாக இடம் பெற்றது.

## அமர்வு ஒன்று

### வாழும் உரிமை

இதில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடையங்கள்

1. பலவந்தமாக வெளியேற்றப்பட்டதால் ஏற்பட்ட பிரச்சினை ஏனைய இடம் பெயர்ந்த வர்களின் பிரச்சினைகளிலிருந்து வேறாக நோக்கப்படல் வேண்டும்.
2. இனப் பிரச்சினைப் பேச்சுவார்த்தைக்கு வடக்கு முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் முன் நிபந்தனையாக முன்வைக்கப்படல் வேண்டும்.
3. மீள்குடியேற்றம் பாதுகாப்பு ஒழுங்கு களையும் கொண்டதாக இருக்க வேண்டும்.
4. மீண்டும் வெளியேற்றப்பட மாட்டார்கள் என்ற உத்தரவாதம் தேசிய சர்வதேச மட்டத்தில் அளிக்கப்படல் வேண்டும்.
5. சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு முற்றாக வேரறுக்கப்பட்டவர்கள் என்ற கண்ணோட்டத்தில் மறுசீரமைப்பு புனர் வாழ்வு நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட வேண்டும்.
6. இம் மக்களை வெளியேற்றிய புலிகள் பேச்சு வார்த்தையில் முக்கியமானவர்கள் என்பதால் முஸ்லிம்களின் வெளியேற்றம் பற்றி பேச்சுவார்த்தையில் கதைக்கப்பட வேண்டும்.

## அமர்வு இரண்டு

### அரசியல் உரிமை

இதில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்

வடமாகாண முஸ்லிம் சிறுபான்மை யினரின் நலன் கருதி அரசு யாப்பு ரீதியாக பின்வருவன வற்றை உறுதிப்படுத்தல்

1. **அடிப்படை மனித உரிமைகள்**

தரமான ஒரு அரசியல் யாப்பில் வழங்கப்படக்கூடிய அடிப்படை மனித உரிமைகள் (உதாரணமாக வாழ்வுரிமை, பேச்சு சுதந்திரம், சமய சுதந்திரம்) போன்றன முஸ்லிம் சிறுபான்மையின ருக்கு வழங்கப்பட வேண்டும். குறிப்பாக பொருளாதார சமய கலாச்சார நடவடிக்கை களில் வடமாகாணத்திற்குள்ளும், வெளி யிலும், சுதந்திரமாக ஈடுபடும் உரிமை முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

2. **சிறுபான்மை பாதுகாப்பு**

சிறுபான்மையினருக்குப் பொருத்தமான யாப்பு ரீதியான பாதுகாப்புகள் பொதுவாக வழங்கப்படுவதுண்டு. வட மாகாண முஸ்லிம்களைப் பொறுத்தவரை

i சிறுபான்மையினரின் நலன்களைப் பாதிக்கும் சட்டங்கள் இயற்றப் படாமலும்,

ii. சிறுபான்மையினர் நீதிமன்றம் மூலமாக நீதிபெறும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப் பதன் மூலமாகவும்



படிப்பகம்

padippakam



iii. சிறுபான்மையினரின் பொருளாதார சமூக நலன்களுக்கு பொலீஸ், இராணுவ ரீதியான பாதுகாப்பை யாப்பு ரீதியாக உறுதிப்படுத்துவதன் மூலமும் முஸ்லிம் களின் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்தல்.

### 3. அரசியல் பிரதிநிதித்துவம்

ஐந்து வீதமான முஸ்லிம் சிறுபான்மை யினர் தமது விகிதாசார அடிப்படை யிலான அரசியல் பிரதிநிதித்துவம் மூலமாக தமது அபிலாசைகளை தேசிய பிரதேச மட்டத்தில் வெளிக் கொணர்வதில் பிரச்சினைகளை எதிர் நோக்குவர். ஆகையால் வடக்கில் முக்கியமான அத்துடன் தனித்துவமான சிறுபான்மையினர் என்ற வகையில் முஸ்லிம்களுக்கு அதிகரித்த பிரதிநிதித்துவத்திற்கான யாப்பு ரீதியான ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

வடமாகாண முஸ்லிம்களின் எண்ணிக்கை பரம்பலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வகையான யாப்பு ரீதியான ஒழுங்குகள் முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காகச் செய்யப்பட வேண்டும்.

1. தேசிய பாராளுமன்றத்திற்கு ஆகக் குறைந்தது ஒரு முஸ்லிம் பிரதிநிதியாவது வடக்கிலிருந்து தெரிவு செய்யக் கூடிய தான தேர்தல் சீர்திருத்தம். உதாரணமாக மன்னார் தேர்தல் . தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்படலாம்.
2. பிரதேச சட்டசபைக்கு 20% பிரதிநிதிகள் சிறுபான்மையினருக்கு வழங்கப்படலாம். இதில் 15% முஸ்லிம் சிறுபான்மை யினருக்கு கிடைக்கக் கூடிய முறையில் தொகுதி முறை அமைக்கப்பட வேண்டும்.
3. வடக்கில் முஸ்லிகள் செறிந்து வாழும் நிர்வாகப் பிரதேசங்களுக்கு (முசலி, எருக்கலம்பிட்டி, விடத்தல்தீவு, முல்லைத்தீவு, யாழ்நகரின் ஒரு பகுதி) அதிகாரப்பரவலாக்களில் கூடுதலான அதிகாரம் (பொருளாதார, சமூக, கலாச்சார விடயங்களில்) கொடுக்கப்பட வேண்டும்.

### 4. சிறுபான்மையினருக்கான சலுகைகள்

பொருளாதார, சமூக ரீதியாக வடமாகாண முஸ்லிம்கள் பின்தங்கியவர்களாகக் காணப்படுவதால் இம்மக்களுக்கு கல்வி, நிலப்பங்கீடு, தொழில் வாய்பில் விசேட சலுகைகள் வழங்கக் கூடிய வழிமுறைகள் செய்யப்பட வேண்டும்.

### 5. கலாச்சார சபை

வடமாகாணத்தில் பரவலாக வாழும் முஸ்லிம் சிறுபான்மையினரை சமயகலாச் சார ரீதியாக ஒன்றிணைக்கக் கூடிய ஒரு சபை அவசியம். யாப்பு ரீதியான ஒழுங் குகள் இச் சபைக்கு செய்யப்பட வேண்டும். இச்சபைக்கு சட்டம் ஆக்கும் அதிகாரம் இருக்காது. ஆனால் இச்சபை

1. முஸ்லிம்களின் சமய சமூக கலாச்சார அபி விருத்தியை நோக்கமாகக் கொண்டதாகும்.
2. வடமாகாணத்தின் சிறிய பெரிய முஸ்லிம் குடியிருப்புக்களைப் பிரதிநிதிப்படுத்து வதாகவும்.
3. வடமாகாண சிறுபான்மையினரின் ஒத்த குரலாக இருக்கக் கூடியதாகவும்
4. வடமாகாண முஸ்லிம்களை இலங்கையின் ஏனைய பிரதேச முஸ்லிம்களுடன் இணைக்கக் கூடியதாகவும்
5. இச் சபை சர்வதேச முஸ்லிம் சமூகத்தின் உதவியுடன் வடமாகாண முஸ்லிம் சிறுபான்மையினரின் சமூக பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்த உதவக் கூடியதாகவும் இருக்கும்.

### இன உறவு அபிவிருத்தி

சகிப்புத்தன்மையை புரிந்துணர்வை இனங்களுக்கிடையில் வளர்ப்பதற்கான எல்லா முயற்சிகளையும் அரசாங்கம் செய்ய வேண்டும் என்பது யாப்பில் வலியுறுத்தப்பட வேண்டும்.



படிப்பகம்

padippakam



## அமர்வு மூன்று

### செயற்பாடுகள்

**1.** இனப்பிரச்சினையில் வடமாகாண முஸ்லிம்களின் தனித்துவத்தை ஆதாரப்பூர்வமாக எழுத்துருவில் கொண்டு வருதல், ஏலவே பொருளாதார இழப்புகள் சம்பந்தமான அறிக்கைகள் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

பின்வரும் எழுத்துருவ ஆதாரங்கள் அச்சிடப்படுவதற்காகத் தயாராக இருக்கின்றன.

1. வடமாகாண முஸ்லிம்களின் வரலாறும்- வாழ்வும்.
2. வடமாகாண முஸ்லிம்களின் பலவந்தமான வெளியேற்றம்.
3. பலவந்த வெளியேற்றமும் பொருளாதார இழப்பும்
4. அகதி நிலை
5. இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் வடமாகாண முஸ்லிம் சிறுபான்மையினர்.

**2.** அகதி மக்களின் அபிலாசைகளும் சமாதானப் பேச்சு வார்த்தையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். எனக்கோரி அகதி மக்கள் மத்தியில் கையெழுத்து வேட்டையில் ஈடுபடுதல்

**3.** மக்களின் அங்கீகாரத்துடன் அரசியல் வாதிகளைச் சந்தித்தல்

**4.** சர்வதேச, உள்நாட்டு மனித உரிமை ஸ்தாபனங்களுக்கும் தூதுவராலயங்களுக்கும் எமது நிலையை எடுத்துரைத்தல்.

**5.** ஒன்றுபட்ட முறையில் அகதிகள் பிரச்சினையை தேசிய மட்டத்தில் முன்வைக்க வடமாகாண முஸ்லிம் பேரவை ஒன்றை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல்.

**6.** எம்மத்தியிலுள்ள கற்றவர்களைப் பயன்படுத்தி அகதி மக்களுக்கு நடைமுறை பிரச்சினைகள், எதிர்கால தீர்வுகள் பற்றி கல்வியூட்டுதல்.

**7.** ஏனைய பிரதேசத்திலுள்ள (கிழக்கு, தெற்கு) முஸ்லிம்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தல்.

**8.** தமிழ் அரசியல் கட்சிகளுடன் (L.T.T.E உட்பட) கல்விமான்களுடன் எமது பிரச்சினை பற்றி உரையாடி புரிந்துணர்வை ஏற்படுத்தல்.

**9.** ஏனைய நன்நோக்கம் கொண்ட தனிப்பட்டவர்களுடனும், இயக்கங்களுடனும் எமது பிரச்சினை பற்றி கலந்துரையாடி அவர்களின் ஆதரவையும் பெற்றுக் கொள்ளல்.

மேற்படி கூட்டத்தில் வடமாகாண முஸ்லிம்களின் இன்றைய பிரச்சினை தனித்துவமானது என்பதனைக் கருத்திற் கொண்டு

1. வடமாகாண முஸ்லிம்களின் வாழ்வுரிமை
2. அரசியல் யாப்பில் வடமாகாண முஸ்லிம் சிறுபான்மையினருக்கு பொருத்தமான பாதுகாப்பு.

என்ற இரு பிரதான அம்சங்களும் இன்றைய இனப்பிரச்சினைக்கான பேச்சு வார்த்தையின் போது கலந்துரையாடப் பட்டு பொருத்தமான தீர்வு பெறப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் இக்கூட்டத்தில் பங்கு பற்றிய வடமாகாணத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் அதிகாரத்தினை வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்புக்கு வழங்கினர்.

❋■❋



படிப்பகம்

# வட மாகாண முஸ்லிம்களின் அபிலாஷைகள் பற்றிய கையெழுத்து வேட்டை

## ஒரு தொகுப்பு அறிக்கை

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு 1995 மே மாதம் 4ம் - 6ம் திகதிகளுக்கிடையில் வட மாகாண முஸ்லிம் அகதிகள் மத்தியில் ஒரு கையெழுத்து வேட்டையை நடத்தியது. இதன் நோக்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக இப்பொழுது இடம்பெறும் பேச்சு வார்த்தைகளில் வடமாகாண (சிறுபான்மை) மக்களின் பிரச்சினைகளையும் முன்வைக்க வடக்கு முஸ்லிம் மக்களின் ஆணையைப் பெற கையெழுத்து வேட்டை நடத்தப்பட்டது. இதன் முறையும் பெறு பேறுகளும் கீழே தரப்பட்டுள்ளது.

NMROவிற்கு பொருளாதார மனிதவள தடைகள் இருந்தமையால் இக்கையெழுத்து வேட்டையை 60 சதவிகிதமான வட மாகாண முஸ்லிம் அகதிகள் வாழும் புத்தளம் மாவட்டத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. கையெழுத்தைச் கோரமுன் அகதிகள் மத்தியில் இந்தக் கையெழுத்து வேட்டையை விளக்கும் ஒரு துண்டுப் பிரசுரமும் முஸ்லிம் சிறு பான்மைக்கு அரசியல் தீர்வில் மாற்றுத்திட்ட யோசனைகள் அடங்கிய கையேடும் வழங்கப்பட்டன.

குறிப்பிட்ட கையொப்பப்படிவத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட வடமாகாண முஸ்லிம் அகதிகளின் கையெழுத்து கோரப்பட்டது. கையெழுத்து வழங்கும் ஒவ்வொருவரும் தத்தமது வயது, வடக்கில் அவர்களது முன்னைய விலாசம் தற்போதய விலாசம், தேசிய அடையாள அட்டை எண், அவர்களது தொழில் முதலான அவர்களது கையெழுத்துக்கு அத்தாட்சியாகக் கோரப்பட்டது. அத்தோடு இவ் அகதி முகாம்களின் தலைவர் களினால் இக்கையெழுத்துக்களை உறுதிப் படுத்துமாறு கேட்கப்பட்டனர்.

***அகதிகள் எதற்காக கையெழுத்திட கோரப்பட்டனர்.***

ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சிடப்பட்ட கையெழுத்துப் பத்திரங்களை வாசித்து, விளங்கி ஏற்றுக் கொண்டபின்னரே கையெழுத்திடுமாறு பணிக்கப்பட்டனர்.

அதாவது, வட மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் தனித்துவமானது என்பதை கருத்திற் கொண்டே தற்பொழுது இனப்பிரச்சினை பற்றிய இடம் பெறும் பேச்சுவார்த்தைகளில் பின்வரும் முக்கிய விடயங்கள் கவனத்திற் கெடுக்கப்பட்டு பொருத்தமான முடிவுகள் எடுக்கப்படவேண்டும்.

(i) வட மாகாண முஸ்லிம்களுக்கு வடக்கில் வாழும் உரிமை

(ii) புதிதாக நிறுவப்படும் அரசியல் யாப்பில் இந்த சிறுபான்மையினத்தின் பாதுகாப்பிற்கு பொருத்தமான பாதுகாப்புகளை வழங்குதல்.

இந்த விடயங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு கொழும்பு 6, 15A றோஹினி வீதியில் அமைந்துள்ள NMRO விற்கு எமது ஆணையை வழங்குகின்றோம்.

**முடிவுகள்**

முஸ்லிம் அகதிகள் மத்தியில் இந்த கையெழுத்து வேட்டைக்கு மாபெரும் ஆதரவு கிடைத்தது .புத்தளம் மாவட்டத்தில் வாக்குரிமைக்குத் தகுதி பெற்ற 65% க்கு மேலான வட மாகாகண முஸ்லிம் வாக்கா ளர்களின் ஆதரவாகும். புத்தளம் மாவட்டத்திலுள்ள 75 க்கு மேற்பட்ட முகாம் தலைவர்கள் கையெழுத் துக்களை அத்தாட்சிப் படுத்தியுள்ளனர். கையெழுத் திட்டவர்களில் 24% பெண்கள் 47% , 42%, 11% 18-30 முறையே வயதிற்கும், 31- 50 வயதிற்கும் 50 வயதும் அதற்கு மேற்பட்டவருமாவார்.

கையெழுத்துக்கள் வடமாகாணத்தின் மாவட்டங்களையும், பிராந்தியங்களையும் வேறாக்கிக் காட்டுவதாக அமைந்துள்ளன. உதாரணமாக 11230 மன்னார் மக்களும், 2864 யாழ்ப்பாண மக்களும், 608 முல்லைத்தீவு மக்களும், 637 வவுனியா மக்களும், 375 கிளிநொச்சி மக்களும் கையெழுத் திட்டுள்ளனர்.

***NMRO விற்கு ஆணை***

எனவே வட மாகாண முஸ்லிம் சிறுபான்மையின் உரிமைகளைப் பெற NMRO தயாரித்துள்ள மாற்று ஆலோசனையை முன்வைக்க இக்கையெழுத்து வேட்டை பூரண ஆணையை வழங்கியுள்ளது.

சகல பத்திரங்களின் மூலப்பிரதிகளும் எப்பொழுதும் பார்வைக்கும் பரிசீலனைக்கும் உள்ளன.

padippakam



# வடமாகாண சிறுபான்மை முஸ்லிம்களின் நல உரிமைகளை பாதுகாப்பதற்கான மாற்று ஆலோசனை

## அறிமுகம் :

வடமாகாணத்தில் முஸ்லிம்கள் ஒரு சிறுபான்மை இனம் இவர்கள் 1990ம் ஆண்டு விடுதலைப்புலிகளினால் வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப் பட்டனர். கடந்த நான்கரை வருடங்களாக இவர்கள் தென் பகுதியில் உள்ள அகதி முகாம்களில் (நலன்புரி நிலையங்களில்) வாழ்ந்து வருகின்றனர். முஸ்லிம் சிறுபான்மையினரது பிரச்சினை தனித்துவமானதாகக் கருதப்பட்டு எந்த ஒரு சமாதானத் தீர்விலும் பின்வரும் முக்கிய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

1 வடக்கில் வடமாகாண முஸ்லிம்கள் வாழ்வதற்க்கான உரிமை.

**அரசியல் சீர்திருத்தத்திற்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பினால் 25.05.95ல் சமர்ப்பிக்கப்பட்ட மாற்று ஆலோசனை.**

2. இப்பொழுது தயாராகிக் கொண்டிருக்கும் அரசியல் யாப்பில் இந்த சிறுபான்மை இனத்தின் பாதுகாப்பிற்கு பொருத்தமான உத்தரவாதங்கள்.

வடக்கு முஸ்லிம்களின் நலவுரிமைகளை பேணுவதற்காக மாற்று ஆலோசனை கீழே விரிவாகத் தரப்படுகிறது.

இந்த உத்தரவாதங்களுக்காக விளக்கம் **"வடமாகாண முஸ்லிம் சிறுபான்மையினரின் அவலநிலை"** என்ற பின்னணி அறிக்கையில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

### வடக்கில் வாழ்கின்ற உரிமை

வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு அங்கு வாழும் உரிமை மறுக்கப்பட்டு அவர்கள் வெளியேற்றப்பட்டனர். பலவந்தமாக வெளியேற்றப்பட்டதனால் உருவாக்கப்பட்ட பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். ஆகவே பின்வரும் விடயங்கள் சமாதான பேச்சுக்களின் போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

### 1. *வாழும் உரிமை :*

தன்மானத்துடனும் கௌரவத்துடனும் வடமாகாணத்திலுள்ள அவர்களது பாரம்பரிய கிராமங்களில் வாழும் உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

### 2. *மீள் குடியேற்றம் :*

முஸ்லிம் அகதிகளை பொருத்தமான முறையில் விரைவாகவும் மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.

### 3. *அகதிகள் அந்தஸ்து :*

வடக்கில் அகதிகள் மீள் குடியமர்த்தப்படும்வரை இவ் அகதிகளின் அந்தஸ்து மீள்பரிசீலனை செய்யப்பட்டு அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பொருத்தமான புனர்வாழ்வு புனரமைப்பு செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

### அரசியல் யாப்பில் சிறுபான்மையினருக்கு பொருத்தமான பாதுகாப்புகள்

வடக்கிலுள்ள முஸ்லிம் சிறுபான்மையினரின் சனச்செறிவு விகிதாசாரம்,



படிப்பகம்

padippakam



இனத்தனித்துவம் மற்ற இனங்களோடு உள்ள தொடர்புகள் முதலியவற்றை மையமாக வைத்து பின்வரும் அரசியல் சீர்திருத்த ஒழுங்குகள் இச் சிறுபான்மையின் நலன்களை வடக்கில் பாதுகாக்கும்.

**1. அடிப்படை உரிமைகள்**

அரசியல் யாப்பில் தனிநபர்களுக்கான அடிப்படை உரிமைகள் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கும் அதே வேளையில் சிறுபான்மை இன, மத, கலாச்சார செயற்பாடுகளில் பங்குபற்றுவதும் தனித்துவமான கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான உரிமையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**2. சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு**

அரசியல் யாப்பில் சிறுபான்மையினருக்காக இருக்கக் கூடிய பாதுகாப்புகளுடன் மேலும் சில திட்டவட்டமான பாதுகாப்புகள் அளிக்கப்பட வேண்டும்.

அ.சிறுபான்மை இனத்தின் நலன்களை பாதிக்கும் எந்த ஒரு சட்டமும் நிறைவேற்றப்படக் கூடாது.

ஆ.சிறுபான்மை இனத்தை பாதிக்கும் எந்த ஒரு பாகுபாடு பொருந்திய நடவடிக்கையும் நீதிமன்றத்தில் வாதிடும் உரிமை அளிக்கப்பட வேண்டும்.

இ.சிறுபான்மை இனங்களுக்கு சமூக பொருளாதார நடவடிக்கைகளுக்கு அரசியல் ரீதியான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

**3. அரசியல் பிரதிநிதித்துவம்**

வடக்கில் முஸ்லிங்களே பிரதான சிறுபான்மை இனமாகும். இருந்தாலும் அப்பிரதேசத்திலுள்ள மொத்த சனத் தொகையில் 5 சதவீதமாகவே உள்ளனர். அதே சமயத்தில் இவர்கள் பூகோளரீதியாக சில பகுதிகளில் செறிந்தும் சில பகுதிகளில் பரந்தும் வாழ்கின்றமை ஒரு சிறப்பம்சமாகும். இவ்வுண்மைகளை மையமாகவைத்து, இம் முஸ்லிம் சிறுபான்மையின் அரசியல் நலன் பின்வரும் முறையில் பாதுகாக்கப்படலாம்.

அ. தேசிய மட்டத்தில் மன்னார்த் தொகுதியின் மொத்த சனத்தொகையில் முஸ்லிம்கள் 30 சதவீதத்தினராக இருப்பதனால், மன்னார்த் தொகுதியை இரு அங்கத்தவர் தொகுதியாக ஆக்குவதனால் வடக்கில் உள்ள முஸ்லிம் சிறுபான்மை தேசிய பாராளுமன்றத்திற்கு ஒரு அங்கத்தவர் களை தெரிவு செய்யலாம்.

ஆ. பிராந்திய சபைக்கு பிராந்திய மட்டத்தில் வடக்கில் வாழும் சிறுபான்மை இனத்திற்கு வடக்கில் அமைந்துள்ள சட்டசபை அங்கத்தவர் தொகையில் ஐந்தில் ஒரு பங்கை உறுதிபப்டுத்த முடியும். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு தெரிவு முறையை பயன்படுத்த முடியும்.

இ.வடக்கில் மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம்கள் முசலி, எருக்கலம்பிட்டி விடத்தல்தீவு, பெரியமடு போன்ற பகுதிகளிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஹிஜ்ராபுரம் தண்ணீருற்று, நீராவிப்பட்டி பகுதிகளிலும்,

யாழ் பட்டணத்தில் சோனக தெருவிலும் செறிந்து வாழ்கின்றனர். இச் சனச் செறிவுகளை உள்ளூராச்சி நிர்வாக அலகுகளாக அமைப்பதன் மூலம் இப் பகுதிகளில் முஸ்லிம் சமூகத்தினருக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகார உரிமையை உபயோகிக்க இடமளிக்கலாம்.

**4.சமூக அபிவிருத்திற்கான விசேட நடைமுறைகள்**

அபிவிருத்தி முயற்சியில் முஸ்லிம்கள் உண்மையான பங்காளிகளாகுவதற்கு பல்கலைக்கழக அனுமதியிலும், காணி ஒதுக்கீடுகளிலும் விசேட சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

**5. கலாச்சார சபை**

வடக்கில் நாலாபக்கங்களிலும் பரந்து வாழும் முஸ்லிம்களின் சமூக கலாச்சார நலன்களை கலாச்சார சபையின் மூலம்



படிப்பகம்

padippakam



பேணி வளர்க்க முடியும். இச் சபை சட்ட நிரூபன அதிகாரங்களை கொண்ட சபையாக இல்லாவிட்டாலும், இச்சிறு பான்மை சமூகத்தின் நலன்களுக்கு குரல் கொடுக்கும் சபையாக அமையும். அதே சமயத்தில் பிராந்தியத்தில் வாழும் முஸ்லிம்களின் சமூக கலாச்சார அபிவிருத் திக்கும் உதவ முடியும். ஒதுக்குப் புறத்தில் வாழும் ஒரு முஸ்லிம் குடியேற் றத்தில் கூட இச் சபைக்கு ஒரு பிரதிநிதி யைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் சந்தர்ப்பம் கூட கிடைக்கும். பல்லின பல்மத சமுதாயத்தில் ஜனநாயக நடைமுறையை பாதுகாக்க இச்சபையின் மூலம் நன்கு முடியும்.

**6. இனங்களுக்கிடையிலான உறவு முறை**

பரஸ்பர புரிந்துணர்வு மூலம் பிராந்தியத் தில் வாழும் பல இன மக்களின் ஒற்றுமையை வளர்ப்பதற்கு அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## முடிவுரை

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடகிழக்கு மாகாண முஸ்லிம்களுக்காக முன்வைத்துள்ள முஸ்லிம் மாகாண சபையோசனை வடக்கில் வாழும் முஸ்லிம்கள் தமக்கென முன் வைத்துள்ள மாற்று ஆலோசனையிலிருந்து வேறுபட்டது. எமது மாற்று ஆலோசனை வடமாகாண முஸ்லிம்களுக்கு பொருத்த மானதும், யதார்த்த பூர்வமானதுமாகும்.

## வடமாகாண முஸ்லிம் சிறுபான்மையினரின் அவல நிலை (அகதி)

### வடக்கு. முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு

இனப்பிரச்சினையில் வடக்கைச் சேர்ந்த முஸ்லிம் சிறுபான்மையும் பாதிக்கப் பட்டுள்ளது. ஆனால் மற்றவர்களின் பிரச் சினையிலிருந்து முஸ்லிம் சிறுபான்மையின் பிரச்சினைகள் வேறுபட்டவை.

இவ்வறிக்கையானது இவர்களது பிரச்சினைகளை இனம்கண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலம் எவ்வாறு இவர்களது அபிலாசைகள் நிறைவுபடுத்தப் படலாம் என்பதை விளக்குகின்றது.

### இந்தப் பிரச்சினைக்கான பின்னனி

1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பிற்பகுதியில் தத்தமது பாரம்பரிய கிராமங் களிலும் பட்டனங்களிலும் வாழ்ந்த வட மாகாண முஸ்லிம்கள் (1990 மதிப்பீட்டின் படி 75.000 ஆயிரம் பேர்) துப்பாக்கி முனையில் பலவந்தமாக விரட்டப்பட்டனர். இவ்வன்செயலுக்கு L.T.T.Eயே காரணம்.

வடக்கு முஸ்லிம்களின் முழு அளவிலான விரட்டல் பின்வரும் முறையில் நடத்தப்பட்டது. எதிர்பாராத விதமாக 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் 22ந் திகதி முஸ்லிம்கள் வடக்கில் வாழ்ந்த குடியிருப்புக்களில் ஒலி பெருக்கிகள் மூலம் L.T.T.E யினர் தெருத் தெருவாக முஸ்லிம்கள் தமது சகல சொத்துக்களையும் உடைமை களையும் விட்டு விட்டு வெளியேற வேண்டும். அல்லது மரணத்தை எதிர்கொள்ள வேண்டு மென அறிவித்தனர். 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் 22ந் திகதியிலிருந்து 48 மணி நேரத்திற்குள் வெளியேற வேண்டும் என்பதே காலக்கெடு. யாழ்பட்டணத்தில் கொடுக்கப் பட்ட கால அவகாசம் இரு மணி நேரமாகும்.

முற்றிலும் எதிர்பாராத இந்தக் கட்டளை வடக்கிலுள்ள தமிழ் மக்களுடன் என்றுமே நல்லெண்ணங்களை பேணிவந்த முஸ்லிம் களுக்கு பேரதிர்ச்சியாக அமைந்தது. L.T.T.E யிடம் இத்தீர்மானத்தை மீளாய்வு செய்யுமாறு முஸ்லிம்களது பரிவான வேண்டுகோள் மறுக்கப்பட்டது. L.T.T.E உறுப்பினர்களால் முஸ்லிம் வீடுகளிலிருந்து பணம், நகை, மற்றும் பெறுமதிவாய்ந்த பொருட்கள் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டன. முஸ்லிம்களுக்கு சொந்தமான வர்த்தக, கைத்தொழில் நிறுவனங்களுக்கும் இவ்வாறே நடந்தன.



படிப்பகம்

padippakam



பலவந்த வெளியேற்றத்தை தடுத்து நிறுத்தலாம் என்ற நம்பிக்கையை முஸ்லிம்கள் இழந்தனர். பெருந்தொகையான L.T.T.E உறுப்பினர்கள் முஸ்லிம்களிடத்தில் பலவந்தத்தை உக்கிறப்படுத்தியமையால் உயிர்களை காப்பாற்று முகமாக முஸ்லிம்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் அண்டை மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் குடியிருப்புகளில் குடியமர்ந்தனர். புத்தளம், அநுராதபுரம், குருணாகல் மேற்காட்டிய மூன்று மாவட்டங்களிலும் நிறுவப்பட்ட 123 அகதி முகாம்கள் ஏறத்தாழ 60.000 அகதிகளை உள்ளடக்கின.

முஸ்லிம்கள் பலவந்தமாக தமது இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு $4\frac{1}{2}$ வருடங்கள் கழிந்து விட்டன. அகதி முகாம்களில் அகதிகள் பலத்த கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். அகதிகள் பிரச்சினை இதுவரை புறக்கணிக்கப் பட்டே வந்துள்ளது. பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் சிறுபான்மையினரது பிரச்சினைகளும் தாமாகவே இடம்பெயர்ந்து ஏனையவர்களுடன் சமப்படுத்தப்பட்டு ஒரு முகமாகவே நடத்தப்பட்டு (இரு தரப்பினரும்) வருகின்றனர்.

### பலவந்த வெளியேற்றத்தின் தாக்கம்

இப்பலவந்த வெளியேற்றம் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு பலதரப்பட்ட சமூக பொருளாதார அரசியல் உளரீதியான பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. வெளியேற்றப்பட முன்னர் அவர்களது உடைமைகள், சொத்துக்கள் சூறையாடப்பட்டன. வடபகுதியிலிருந்து வெருண்டு செல்லும் பொழுது அவர்கள் பணமாக ஆயிரம் ரூபாவரையே கொண்டு செல்ல அனுமதிக்கப் பட்டனர். பாதுகாப்பான பிரதேசங்களிற்கு வந்தபின்னர் தற்காலிகமான கட்டடங்களில் தங்க அனுமதிக்கப்பட்டு பின்னர் அகதி நலன்புரி நிலையங்களிற்கு மாற்றப்பட்டனர்.

இந்த நலன்புரி நிலையங்கள் சுகாதாரமற்ற சூழலில் அமைந்ததுமல்லாமல் சனச்செறிவாகவும் அமைந்தன. அகதிப்பிரச்சினை உலர் உணவு உதவியுடனும் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் மூலமும் சமாளிக்கப்பட்டது.

தற்பொழுது பலவந்தமாக வெளியேற்றப்பட்ட மக்கள் அகதி மக்களாக கருதப்படும் நிலை ஸ்தம்பிதம் அடைந்தது. இந்த நலன்புரி நிலையங்களில் வாழும் சமூகத்தின் சுகாதார, கல்வி, கட்டுப்பாடு பண்பாடு குன்றி வருவதைப் பற்றி, எந்த ஒரு மதிப்பீடும் இடம் பெறவில்லை. உண்மையிலேயே இச்சமூகத்தவர் மத்தியில் உடல் ரீதியான உளரீதியான குணாதிசயங்கள் குற்றியுள்ளமை காணக்கூடியதாக உள்ளது.

இந்த சமூகம் வளர்ந்து வரும் இனப்பலாத்காரத்திற்கு பலிக்கடாயாகியுள்ளது. அரசியல் தாக்கத்தை ஏற்படுத்துமளவிற்கு இச்சமூகம் குறுகிய தொகையினராதலால் இவர்களது அகதிப்பிரச்சினை தேசிய சர்வதேச ரீதியிலும் சமாதான பேச்சுக்களிலும் முன்னெடுக்கப்படவில்லை.

### பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் வரிசைப்படுத்தப்பட்ட பிரச்சினைகள்

உண்மையிலேயே இச் சமூகத்தின் அகதிப் பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினையே. இவர்களது பலவந்த வெளியேற்றத்திற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒரு தனி நாட்டை அடையப் போராடும் L.T.T.E யே பொறுப்பாகும்.

இம்மக்கள் வடக்கிலுள்ள தத்தமது சொந்த இடங்களிற்கு மீண்டும் செல்ல ஒரு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இச்சமூகம் வடக்கில் மீண்டும் குடியமருவது முக்கியத்துவம் பெற வேண்டும். மீண்டும் குடியமர்த்தப்படும் போது அரசியல் யாப்பு மூலமான பாதுகாப்புகள் இவர்களுக்கு ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.



படிப்பகம்

padippakam



## வடக்கில் மீள் குடியேற்றம்

அரசியல் பேச்சு வார்த்தைகள் மூலமே இவர்கள் வடக்கில் மீண்டும் குடியமர்த்தப் படுவது பற்றி, ஒழுங்குபடுத்த முடியும். 1990 இல் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட பொழுது இனஅடிப்படையில் தனிமைப் படுத்தப்பட்டே வடக்கில் வாழும் உரிமை இவர்களுக்கு மறுக்கப்பட்டது. வடக்கில் L.T.T.E இராணுவ ரீதியாக மிக வலிமை பொருந்தியதால் தமது உயிர்களுக்குப் பயந்து தமது சொந்த இருப் பிடங்களுக்கு திரும்ப வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் முடியாம லிருக்கின்றனர்.

இருந்தாலும் பத்திரிகைகளில் வெளிவந்த சில செய்திகள் படி L.T.T.E யினர் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் தம்மால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டது குறித்து வருத்தம் தெரிவித்தமை ஒரு சிறு நம்பிக் கையை ஏற்படுத்துகிறது. L.T.T.E யினரின் மன நிலையில் ஏற்பட்டுள்ள இம்மாற்றம் உற்சாகத்தைத் தருகின்றது. முஸ்லிம்கள் தத்தமது இருப்பிடங்களில் குடியமர்த்தப் படுவதும் பின்வரும் உரிமைகள் உத்தரவாத மாக்கப்படுவதும் இணைந்து போக வேண்டும்.

### அ. தத்தமது பாரம்பரிய இருப்பிடங்களில் வாழ்வதற்கான உரிமை

இந்த அகதி மக்களை மீள் குடியேற்றும் பொழுது இவர்கள் தத்தமது சொந்த இருப்பிடங்களில் வாழும் உரிமை மறுக்கப் பட்டுள்ளனர் என்ற நிலைப்பாட்டிலேயே கணிக்கப்பட வேண்டும். இவர்கள் மீளக் குடியேற்றப்படமுன் இவர்களது இவ் அடிப்படை உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்த வாழும் உரிமை சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஆகக் கூடிய முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

### ஆ. பாதுகாப்பு

மீள் குடியமர்த்தப்படும் பொழுது இந்த சிறுபான்மை முஸ்லிம்கள் மீண்டும் பலவந்தமாக வெளியேற்றப்பட மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை தேசிய சர்வதேச சமூகம் வழங்க வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் இப்பிராந்தியத்திலுள்ள சிறுபான்மையினரின் நலன்களை பாதுகாக்க குறுகிய கால பாதுகாப்பு ஒழுங்குகளை எடுக்க வேண்டும்.

### இ. சொத்து உரிமை

இழந்த அசைவுள்ள அசைவற்ற சொத் துக்களை மீளப்பெறும் உரிமை உறுதிப் படுத்தப்பட வேண்டும். வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் அசைவுள்ள அசைவற்ற சொத்துக்கள் பற்றிய கோரிக்கைகளை பரிசீலிக்க ஒரு சுதந்திரமான இணக்கக் குழு நியமிக்கப்பட வேண்டும். இதே இணக்கக் குழுவிற்கு முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதவர்களுக்கிடையிலான சொத்துக்கள் பற்றி பிணக்குகளை தீர்த்துவைக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

### ஈ. நஷ்டஈடு

பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் அசைவுள்ள அசைவற்ற சொத்துக்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

### உ. புனர்வாழ்வு புனரமைப்பு

பலவந்தமாக தத்தமது சொந்த புராதன இருப்பிடங்களிலிருந்து முற்றாக வெளியேற் றப்பட்ட சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்ப பொருத்தமான புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் இந்த புனர்வாழ்வு புனரமைப்பு வேலைகளில் பங்காளிகளாக அமைய வேண்டும்.

மேற்கூறப்பட்டவை எந்த ஒரு சமூகத்தினதும்அடிப்படை உரிமைகளாகும். முஸ்லிம் சிறுபான்மையின் இவ் அடிப்படை உரிமைகள் அரசியல் ரீதியாக அங்கீ கரிக்கப்பட்டு சுமுகமான முறையில் தீர்க்கப்பட வேண்டும்.



படிப்பகம்

padippakam



## வடமாகாண முஸ்லிம்களுக்கு பொருத்தமான சிறுபான்மை பாதுகாப்பு

நாட்டில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்திற்கு தீர்வு வடக்கு கிழக்கு மாகாணங்களிற்கு கூடிய ஆட்சி அதிகாரங்களை வழங்குவது தான் என்று கருதப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் இப்பிராந்தியத்தில் வாழும் முஸ்லிம் சிறுபான்மையின் நல உரிமைகள் அரசியல் சட்டரீதியாக வழங்கப்பட வேண்டும். இங்கு நாம் முன்வைக்கும் ஆலோசனைகள் வடக்கில் வாழும் முஸ்லிம் சிறுபான்மைக்கு மிகப் பொருத்தமான அரசியல் பாதுகாப்புகளாகும். இச்சிபார்சுகளிற்குரிய காரணங்களாவன.

### அ. பூகோல ரீதியான செறிவு

வடமாகாணத்தின் முக்கிய சிறுபான்மை முஸ்லிம்களேயாவர், மாகாணத்தின் மொத்த சனத் தொகையில் முஸ்லிம்கள் 5% ஆவர். விகிதாசாரப்படி முஸ்லிம்கள் சிறு தொகையினராயினும் வடமாகாணத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் சில நிலப்பரப்புகள் உள்ளன. உதாரணமாக மன்னார் மாவட்டத்தில் (முசலி, எருக்கலம்பிட்டி, விடத்தல்தீவு, பெரியமடு) முல்லைத்தீவு மாவட்டத்தில் (ஹிஜ்ராபுரம்-நீராவிப்பிட்டி, முல்லைத்தீவு பட்டனத்தின் தென்பகுதி) யாழ் மாநகரசபையில் ( 19ம், 20ம் 21ம், வட்டாரங்கள்) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். முஸ்லிம்கள் செறிந்து வாழும் இப்பகுதிகள் முஸ்லிம்களுக்கு விசேட நிர்வாக அலகுகளாக உருவாக்கப்பட வேண்டும். மொத்த வடமாகாண முஸ்லிம்களில் 75% இங்கு குறிப்பிட்ட பகுதிகளில் வாழ்வதால் பெரும்பான்மையான முஸ்லிம்களின் நலன்கள் பாதுகாக்கப்படும். அதே சமயத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளினதும் பரந்து வாழும் குடியிருப்பு பகுதிகளினதும் முஸ்லிம்களின் சமூக கலாச்சார நலன்களை வடமாகாண முஸ்லிம்களிற்கு ஒரு கலாசார சபை மூலம் பாதுகாக்க முடியும்.

### ஆ. இன அடையாளம்

வடக்கில் முஸ்லிம்கள் ஒரு தனித்துவமான கலாச்சார பாரம்பரியம் கொண்ட ஒரு இனமாகும். இவர்களது மதமே இவர்களது வாழ்க்கையின் மிக முக்கியமான அம்சமாகும். இவர்களுடைய மத கலாசார பின்னனி இச்சமூகத்திற்கு ஒரு தனித்துவத்தைக் கொடுத்துள்ளது. இவர்கள் தமது மதப்பாரம்பரியத்தை மிகவும் மதிப்பவர்கள். தங்களுடைய மதமே தம்மை வடக்கில் ஒரு தனித்துவமான இனமாக நிலைத்திருக்கச் செய்துள்ளதென்றும் இதுவே தம்மை நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள முஸ்லிம்களுடன் இணைப்பதாக நம்புகின்றனர்.

### இ. இனங்களுடனான தொடர்புகள்

முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்படும் வரை தமிழ் இனத்துடன் காலா காலமாக பின்னிப்பினைந்து வாழ்ந்து வந்தனர். பொருளாதார ரீதியில் இவ்விரு இனங்களும் ஒன்றிலொன்று தங்கி வாழ்ந்தமையும் ஒரு இனத்தை மற்றைய இனம் மதித்து வாழ்ந்ததுமே இந்த ஒருமித்த வாழ்க்கைக்கு அத்திவாரமாக அமைந்தது.

வடமாகாண முஸ்லிம்களின் பரந்த அளவிலான எண்ணிக்கையையும் இனத்தனித்துவத்தையும் ஏனைய இனங்களுடனான சுமூகமான தொடர்பையும் மனதிற் கொண்டு இவ்வினத்தின் நலன்களைப் பேன பின்வரும் பாதுகாப்புக்களை சட்டரீதியாக அளிக்குமாறு பிரேரிக்கின்றோம்.

அ. தமிழர் செறிந்து வாழும் வடமாகாணத்தில் சிறுபான்மையாக வாழும் உரிமை.

ஆ. சட்ட அமைப்பில் கூடுமான அளவு அடிப்படை சிறுபான்மை பாதுகாப்பு.

இ. தேசிய, பிராந்திய சட்டசபைகளில் மேலதிக பிரதிநிதித்துவம்

ஈ. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்தைக் கொண்ட புதிய நிர்வாக அலகுகளை உருவாக்குதல்.



படிப்பகம்

padippakam



உ. அவர்களுடைய மத கலாச்சார பாரம் பரியங்களை பாதுகாத்து வளர்க்க புதிய முஸ்லிம் கலாச்சார சபையை அமைக்க விஷேட அரசியல் ஒழுங்குகளைச் செய்தல்.

மேற்கூறியவை வடமாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் சிறுபான்மையின் அபிலாசைகளை திருப்தி படுத்தும் இச்சிறுபான்மை பாதுகாப்புகள் நியாயமற்றவையல்ல. பெரும்பான்மை சிறுபான்மைக்கிடையில் சச்சரவுகளை உண்டாக காரணமெதுவுமில்லை. மாறாக இது இனங்களுக்கிடையில் உறவுகளை பலப்படுத்தும்.

## முடிவுரை

சமாதானப் பேச்சுவார்தைகளில் பின்வரும் காரணங்களுக்காக வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு விசேட கவனம் எடுக்கப்பட வேண்டும்.

1. இந்நாட்டில் எந்த ஒரு இனமாவது முற்றாக விரட்டப்பட்டதை அனுபவிக்கவில்லை.
2. மீளக் குடியமர்த்துவதற்கான ஒழுங்கு முறைகள் இல்லாமல் எந்த ஒரு இனமும் அகதி முகாம்களில் மிக நீண்டகாலம் வைக்கப்படவில்லை.
3. வடமாகாண முஸ்லிம்கள் உடனடியாக மீளக் குடியேறும் வாய்ப்புள்ளவர்களாகத் தென்படவில்லை. எனவே வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்க குறுகிய கால நீண்டகால தீர்வுகள் தேசிய சர்வதேச சமூகங்கள் கவனத்திற் கொள்ள வேண்டும்.
4. வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் தீர்வது அரசியல் யாப்பு சீர்திருத்தங்களிலும் கட்சிகளுக்கிடையிலான பேச்சு வார்த்தைகளிலும் தங்கியுள்ளது.
5. பலவகையில் வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டவை. எனவே வடமாகாண முஸ்லிம் சிறுபான்மையின் நலன்களை பாதுகாக்க வித்தியாசமான சட்டப் பாதுகாப்புகள் தேவைப்படலாம்.
6. வடமாகாண முஸ்லிம்களின் சனவிகிதாசாரத்தைக் காரணமாகக் காட்டி இச் சமூகத்தின் பாரிய பிரச்சினைகளை புறக்கணிக்கக் கூடாது.

## அதிகாரப்பரவலாக்கல் ஒரு முக்கிய படிக்கல்

தற்பொழுது அரசாங்கம் தனது அதிகாரப்பரவலாக்கல் யோசனையை முன்வைத்துள்ளது. இனப்பிரச்சினைக்காக முன் வைக்கப்பட்ட யோசனைகளில் ஒரு முக்கிய படிக்கல்லாக இதனைக் கருத முடியும்.

இருந்த போதிலும் இத் தீர்வுத் திட்ட யோசனையில் அதிகாரப்பரவலாக்கத்திற்கு உட்படப் போகின்ற சகல பிராந்தியங்களிலும் குறிப்பாக வட கிழக்குப் பிராந்தியங்களுக்குள் வாழ்கின்ற முஸ்லிம்கள் உட்பட ஏனைய சிறுபான்மையினரின் அரசியல் மற்றும் உண்டான ஏனைய பாதுகாப்புகள் எதுவும் தெளிவாக வரையறுத்துக் கூறப்படவில்லை.

ஆகவே இதனைத் தெளிவாக அரசு முன்வைக்க வேண்டும். இச்சிறுபான்மையின் அரசியல் அபிலாசைகளை நிவர்த்தி செய்ய அரசியல் யாப்பு ரீதியாக உறுதி செய்யப்பட வேண்டும். இதுவே சிறுபான்மை முஸ்லிம்களின் எதிர்பார்ப்பாகும்.



படிப்பகம்

padippakam



# ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிச குடியரசின் மேன்மை மிகு ஜனாதிபதிக்கு அனுப்பிய மாற்று ஆலோசனையுடன் இணைக்கப்பட்ட கடிதம்

1991ம் ஆண்டு ஒக்டோபர் பகுதியில் பரம்பரை பரம்பரையாக வட மாகாணத்தில் தத்தமது கிராமங்களிலும் பட்டணத்திலும் வாழ்ந்த ஏறாத்தாழ எழுபத்தையாயிரம் முஸ்லிம்கள் துவக்கு முனையில் பலாத் காரமாக வெளியேற்றப்பட்டமை மேதகு ஜனாதிபதிக்கு தெரிந்ததே.

கடந்த நாலரை வருடங்களாக இந்த முஸ்லிம்கள் வட மாகாணத்திற்கு மீண்டும் போக முடியாத நிலையிலேயே நூற்றுக்கும் மேற்பட்ட அகதிமுகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

வ. மு. உ. அமைப்பினராகிய நாங்கள் வட மாகாண முஸ்லிம் சிறுபான்மையினரின் நலன்களை பிரதிநிதிப்படுத்தும் அமைப்பாகும். இந்த அமைப்பு ஏறத்தாழ மூன்று வருடங்களுக்கு முன் நிறுவப்பட்டது. முஸ்லிம் சிறுபான்மையினரின் உரிமைகளை மீண்டும் நிலை நாட்டுவதே இந்த அமைப்பின் முக்கிய குறிக்கோளாகும். இது தொடர்பாக வ. மு. உ. அமைப்பு பல ஆய்வுகளை நடாத்தியதுடன் முஸ்லிம் அகதிகளுடைய நிலை பற்றியும், அபிலாசைகள் பற்றியும் விபரங்கள் சேகரித்தும், கருத்தரங்குகள், கூட்டு கலந்துரையாடல்கள் நடாத்தியும் வந்துள்ளது..

இவ்வமைப்பின் முக்கிய பங்களிப்புகளில் ஒன்றுதான் வடமாகாணத்தில் இருந்து ஒக்டோபர் 1990ல் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் அசைவு அசைவற்ற சொத்துக்கள் பற்றி இலங்கை பாராளு மன்றத்திற்கு 1993 ஜுலை மாதம் 23ம் திகதி சமர்ப்பித்த ஒரு அறிக்கையாகும்.

இப்பிரச்சினையை தீர்த்துவைப்பதற்காக இதய சுத்தியுடன் மேதகு ஜனாதிபதி எடுத்துவரும் முயற்சிகளை நாங்கள் அறிவோம்.

எனவே அகதிகளிடமிருந்து சமாதான பேச்சு வார்த்தை சம்பந்தமாக அவர்களது சில கருத்துக்களை (அபிப்பிராயங்களை) நாம் சேகரித்தோம். இதற்காக அண்மைக் காலத்தில் எமது அமைப்பு முஸ்லிம் அகதிகள் மத்தியிலே அவர்களுடைய பிரச்சினைகள் என்ன? அபிலாசைகள் என்ன? இப்பொழுது நடைபெறும் பேச்சு வார்த்தை யில் அவை எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி பல கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் நடத்தியுள்ளோம்.

வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் பற்றி ஒரு அபிப்பிராய கணிப்பு எவ்வகையில் அமைந்துள்ளது என்பதைப் பார்க்கும் பொழுது, சட்ட ரீதியாக வட மாகாண முஸ்லிம் சிறுபான்மையினருக்கு போதிய பாதுகாப்பும், அரசியல் பிரதிநிதித் துவமும், உறுதிப்படுத்தப்படுவதன் மூலம் தான் அவர்கள் மீண்டும் வடமாகாணத்தில் ஒரு சிறுபான்மையினமாக வாழ முடியும். உண்மையிலேயே இது இன ரீதியான பிணக்கைத் தீர்த்து வைப்பதற்கு பொருத் தமானதும் யதார்த்த பூர்வமான அணுகு முறையாகும்.

வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம் களை மீளக் குடியேற்றுவது அவசியமானதும் அவசரமான விடயமாக இம் முஸ்லிம்கள் கருதுகின்றனர். இப்படியான மீள் குடியேற்றம் இம் முஸ்லிம் சிறு பான்மையினருக்கு வடமாகாணத்தில் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவதுடன் அவர்களது புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகள் அவர்கள் தமது சொந்த மண்ணிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டார்கள் என்பதையும் அவர்கள் நிரந்தரமாக போய் வாழ வேறு இடம் இல்லை என்பதும்



படிப்பகம்

padippakam



ஒன்றோடு ஒன்று இணைய வேண்டிய விடயங்களாகும்.

வடமாகாண சிறுபான்மை முஸ்லிம்களின் அபிலாசைகள் பற்றிய ஒரு விரிவான அறிக்கை இத்துடன் இணைக்கப்படுகின்றது. (வட மாகாண முஸ்லிம் சிறு பான்மையினரின் நிலை) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பின்னனி அறிக்கை அவர்களது அபிலாசை களை நியாயப்படுத்துகின்றது.

வ.மு.உ. அமைப்பு இனங் காணப் பட்டுள்ள அரசியல் பிரச்சினை சம்பந்தமாக முஸ்லிம் அகதிகள் மத்தியிலேயே ஒரு கையெழுத்து வேட்டையும் ஒழுங்கு செய்தது. முஸ்லிம் அகதிகள் ஏகோபித்த பெரும் பான்மையாக, இம் முஸ்லிம்களின் பிரச்சினை தனித்துவமானது என்றும் வட மாகாணத்தில் மீண்டும் வாழும் உரிமையும் அவர்களுக்கான பாதுகாப்பும் பிரதிநிதித்துவமும் புதிதாக உருவாக்கப்படும் அரசியல் யாப்பில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதாக அமைந்தது.

அத்துடன் இந்த குறிக்கோளை நோக்கி செயற்பட வ.மு.உ. அமைப்பிற்கு அவர்கள் ஆணை தந்துள்ளனர். அகதிகள் மத்தியிலே நாங்கள் நடத்திய கையெழுத்து வேட்டை பற்றிய ஒரு சுருக்கமான அறிக்கை யொன்றையும் இத்துடன் சமர்ப்பிக்கின்றோம்.

ஆகவே மேதகு ஜனாதிபதி அவர்களே தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமாதான பேச்சுக்களில் இச் சிறுபான்மை சமூகத்தின் நிலைபற்றியும் அபிலாசைகள் பற்றியும் மேதகு ஜனாதிபதி அவர்கள் கரிசனையோடு அணுகுவதற்கு நாங்கள் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்போம்.

## தெரிவுக்குழுவின் தலைவருக்கும், சகல அரசியல் கட்சிகளுக்கும், பாராளுமன்ற அனைத்து முஸ்லிம் உறுப்பினர்களுக்கும், வெளிநாட்டு தூதராலயங்களுக்கும், மனித உரிமை அமைப்புக்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்ட மாற்று ஆலோசனையுடன் இணைக்கப்பட்ட கடிதம்

வடமாகாணத்தில் முஸ்லிம்கள் ஒரு சிறு பான்மையினர் ஆனால் அவர்கள் தற்பொழுது அங்கு வாழவில்லை. ஒக்டோபர் 1990ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளினால் துப்பாக்கி முனையால் அவர்களது பூர்வீக பட்டிணங்கள், கிராமங்களிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப் பட்டனர். கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக வெளியேற்றப்பட்ட இந்த முஸ்லிம்கள் வடக்குக்கு போக முடியவில்லை.

வ.மு.உ.அமைப்பு (N.M.R.O) பாதிக்கப்பட்ட வடக்கு முஸ்லிம் மக்களின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இச் சிறுபான்மை யின் உரிமைகளை மீட்டெடுப்பதே வ.மு.உ. அமைப்பின் குறிக்கோளாகும்.

தற்பொழுது இடம் பெற்றுவரும் அரசியல் யாப்புச் சீர்திருத்த முயற்சியிலும் அதிகார பரவலாக் கத்திலும், பலாத்காரமாக வெளியேற்றப்பட்டுள்ள இச் சிறுபான்மையினத்தின் பிரச்சினைகள் கவனத்திற்கு எடுக்கப்படவில்லையென்பதை நாங்கள் உணர்கின்றோம். அகதிகள் மத்தியிலேயே நடத்தப் பட்ட செயலமர்வுகளில் அவர்களுடைய அபிலாசை களை இனம் கண்டுள்ளோம். இச்சிறுபான்மை யினர்களின் நலன்களை பேணுவதற்காக நாங்கள் ஒரு மாற்றுத் தீர்வைத் தயாரித்து அதற்கான அங்கீகாரத்தை மக்களிடமிருந்து கையெழுத்து வேட்டையின் மூலம் பெற்றுள்ளோம்.

மேற்படி மாற்று ஆலோசனைகளை அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவருக்கு அனுப்பியுள்ளோம். இத்துடன் உங்களுடைய ஆலோசனைக்காக எங்க ளுடைய மாற்று ஆலோசனைகளையும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்களையும் இணைத் துள்ளோம். இது சம்பந்தமாக மேலும் தகவல்களைத் தருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைவோம். உங்களையும் உங்களுடைய பிரதிநிதிகளையும் சந்தித்து மேலும் சிறுபான்மை நிலைபற்றி விளக்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.



படிப்பகம்

padippakam



# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கப்பல் துறைமுக, புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சருமான கௌரவ அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களுக்கு அனுப்பி வைத்த மாற்று ஆலோசனையுடன் இணைக்கப்பட்ட கடிதம்

1990 ஒக்டோபரில் வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த எழுபத்தையாயிரதிற்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் மிகக் குறுகிய கால அவகாசத்திற்குள் தாம் வாழ்ந்து வந்த பிரதேசத்தை விட்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள்.

இவர்கள் வெளியேற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் இவர்களது அனைத்துச் சொத்துக் களும் பலாத்காரமாகப் பறிக்கப்பட்ட நிலையில், அடுத்த நேர உணவுக்கும் எவ்விதமான வழியுமின்றி, பணமும் உடைகளும் முற்றாக அபகரிக்கப்பட்ட நிலையில் வெறும் கையுடன் உடுத்திய உடையுடன் வெளியேற்றப்பட்டார்கள் என்பது யாவரும் அறிந்ததே.

அகதி நிலையில் திருப்தியான மாற்றம் எப்பொழுது ஏற்படும்? தமது அகதிநிலை ஒழிந்து இந்நாட்டில் வாழும் ஏனைய மக்களைப் போல் தாமும் எப்போது சராசரி பிரஜையாக வாழும் நிலை உருவாகும் என்ற ஏக்கத்துடன் வாழ்ந்து வருகிறார்கள்.

கடந்த இரண்டரை வருடங்களாக வடக்கு முஸ்லிம் உரிமைக்கான அமைப்பு (N.M.R.O.). இம் மக்களது,

1. பூர்வீக இடத்தில் வாழும் உரிமை
2. வட மாகாணத்தில் மீளக் குடியேறும் போது அச்சமின்றி தனித்துவத்தோடும், பூரண பாதுகாப்புடனும் வாழும் அரசியல் உரிமை
3. பலவந்தமாக வெளியேற்றப்பட்டதால் ஏற்பட்ட அசையும், அசையாத ஆவன இழப்பீடுகளை மீளப் பெறும் உரிமை.
4. மீளக் குடியேறும் வரை இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் பொழுது சகல வசதிகளையும் பெற்றுக் கொள்ளும் உரிமை.

இவைகளைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இக் குறிக்கோள்களை அடைவதற்காக,

* வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் புள்ளி விபரங்கள் திரட்டப்பட்டு அவை ஆவணமாக ஆக்கப்பட்டு இலங்கைப் பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டது. (இது தங்கள் மூலமே சமர்ப்பிக்கப்பட்டது என்பதை இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் கூறிக் கொள்கிறோம்)
* அவர்கள் மத்தியில் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கும் மனோநிலையை ஏற்படுத்துவதற்காக வேண்டி கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் நடத்தி வருவதோடு, 'அகதி' என்ற சஞ்சிகை வெளியீட்டின் மூலமும், சிறு கை நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் மூலமும் இம்முயற்சிகளை மேற் கொண்டு வருவதுடன்,
* அரசியல் தீர்வொன்றிற்கு வட மாகாண முஸ்லிம்களின் அபிப்பிராயங்களை ஒன்று திரட்டி அதற்காக மக்களைத் தயார் படுத்தும் வேலையிலும் ஈடுபட்டு வருகிறது.

இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர இன்று பலதரப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும், அரசியற் கட்சிகளும், அரச சார்பற்ற ஸ்தாபனங்களும் இனப்பிரச்சினை தொடர்பான தமது சிபார்சுகளை முன்வைத் துள்ளதையும் நாம் காணுகிறோம்.



படிப்பகம்

padippakam



அதே வேளை, இம் முயற்சிகளிலெல்லாம் வட கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளும் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் சிங்கள மக்களின் பிரச்சினைகளுமே முன்னுரிமை பெற்றுள்ளது.

இதுவரையில் முன்வைக்கப்பட்ட எந்த சமாதானத் தீர்வுத் திட்டத்திலும்

* வட மாகாண முஸ்லிம்களின் வாழ்விட உரிமை
* புனர்வாழ்வு புனர்நிர்மாணம்

ஆகிய இம்மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றி சிபாரிசுகள் இடம்பெறாதது மிக வேதனைக்குரியது.

தனி மனித உரிமைக்காகப் பாடுபட்டுவரும் சர்வதேச மனித உரிமைகள் ஸ்தாபனங்கள் கூட இவ்வடமாகாண முஸ்லிம்களின் அடிப்படை உரிமை மீறல் பற்றி அரசு மட்டத்திலோ தேசிய மட்டத்திலோ எடுத்துச் செல்வதற்கான முயற்சிகளை மேற் கொள்ளவில்லை.

உண்மையில் இன்று தமக்குச் சொந்த மில்லாத பிரதேசத்தில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் வடபகுதி முஸ்லிம்கள்

* உணவு, நிவாரணம் தொடர்பான பிரச்சினைகள்
* உடை நிவாரணம் தொடர்பான பிரச்சினைகள்
* குடியிருக்கும் நிலம், குடிசைகள் சம்பந்தமான பிரச்சினைகள்.
* தொழில் வாய்ப்புப் பிரச்சினைகள்
* கல்விப் பிரச்சினைகள்
* ஒழுக்க கலாச்சார ரீதியான பிரச்சினைகள்
* அரச ஊழியர்கள் பிரச்சினைகள்

என்ற இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டு இவற்றுடன் நாளாந்தம் போராடிக்கொண்டிருக்கிறார்கள் இம்மக்கள்.

இன்று அடிப்படை வாழ்விட உரிமைக்குக் கூட அரசியல் மட்டத்தில் உத்தரவாத மற்றவர்களாகக் காணப்படும் இச் சூழ் நிலையில், இம்மக்களது உண்மை நிலைமைகளைப் புரிந்து இவர்களுக்காக இதய சுத்தியுடன் குரல் எழுப்ப யாரும் முன்வராத நிலையில் NMRO இப்பணியைச் செய்வது தமது வரலாற்றுக் கடமை எனக் கருதியது.

இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர இன்று எடுக்கப்படும் முயற்சியில் வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினை பின் தள்ளப்பட்டுவிடாமல் இருப்பதற்கு அல்லது புறக்கணிக்கப்படாமல் இருக்க, "வடமாகாண முஸ்லிம் சிறுபான் மையினரின் நலன் பாதுகாப்பதற்கான மாற்றுத் திட்டம்" ஒன்றை முன்வைத்துள்ளது. அதன் பிரதியை இத்துடன் தங்களுக்கும் இணைத்துள்ளோம்.

தயவு செய்து தாங்கள் இதனை நன்கு ஆராய்ந்து எமது மக்களது பெரும்பாலா னோரின் ஒன்று பட்ட முடிவாக இருக்கும் இத்திட்டத்தை நடைமுறைச் சாத்தியமாக்கும் விதத்தில் எமது மக்களுக்கு ஒத்துழைக்கும்படி வேண்டிக்கொள்கிறோம்.

இது விடயமாக மேலும் தங்களுடன் விரிவாகப் பேசுவதற்கும், கருத்துக்களைப் பரிமாறுவதற்கும் விரும்புகிறோம். ஆகவே, தயவு செய்து அதற்கான நேரடிச் சந்திப்புக்கு சுமுகமான சூழ்நிலையில் விரைவாக நேரத்தை ஏற்படுத்தித் தரும்படியும் வேண்டிக் கொள்கிறோம்.



படிப்பகம்

padippakam



# அரசியல் கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகள்

**"அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தில் அதிகாரப்பரவலாக்கமும், விரட்டப்பட்ட வடக்கு முஸ்லிம்களின் எதிர்பார்ப்பும்" என்ற அடிப்படையில் அரசியல் கட்சிகளிடம் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு முன் வைத்த மாற்றுத்திட்டம் சம்பந்தமான பேச்சு வார்த்தைகளின் முழு விபரமும் தொகுத்து வழங்கப்படுகிறது.**

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடனான பேச்சு வார்த்தை

### முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை

**காலம்: 06.06.1995**

**இடம்:** கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுத் தலைவருமான ரவுப் ஹகீம் அவர்களின் பாராளுமன்றக் காரியாலயத்தில்

**நேரம்: மாலை 4.30 – 6.15**

**சி.ல.மு.காங்கிரஸ் சார்பில் கலந்து கொண்டோர்.**
*ரவுப் ஹகீம் எம்.பி, எம்.எம்.சுஹைர் எம்.பி, எம்.ஐ.எம். முஹியித்தீன், எம்.டி.ஹஸன் அலி, எஸ்.எம். யாஸீன்.*

**வ.மு.உ. அமைப்பு சார்பில் கலந்து கொண்டோர்:**
*எஸ். எச். ஹஸ்புல்லாஹ், பி.ஏ.எஸ்.சுப்யான், எஸ்.எம்.ஏ.நியாஸ், எஸ்.எச்.ரிஸ்னி, எம்.ஏ. கலிலூர் ரஹ்மான்.*

வ.மு.உ. அமைப்பினர், வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளை முன்வைத்து இப்பிரச்சினைகளுக்கு சமூகப் பொருளாதார அரசியல் ரீதியில் எவ்வகையான நிவாரணங்களை அளிக்க முடியும் என்பதைப் பற்றி எடுத்துக் கூறினர்.

கலந்துரையாடலின் பின்பு பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. அச்சுருத்தலின் பேரில் வெளியேற்றப் பட்ட வடமாகாண முஸ்லிம்கள் சாதாரண மாக இடம் பெயர்ந்தவர்களாகக் கருதப்படாமல் அவர்களுடைய இடம் பெயர்ந்த அந்தஸ்து மேலும் உயர்த்தப்பட்டு அவர்கள் 'அகதி' களாக் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த இலக்கை நோக்கி சந்திப்பில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினர்களும் ஒத்துழைப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

2. புதிய அரசியல் சீர்திருத்தத்தில் வட மாகாண முஸ்லிம்களுக்கு எப்படியான அரசியல் பாதுகாப்புக்களை வழங்க முடியும் என்பது பற்றி இரு பகுதியினரும் வெவ்வேறு கோணத்தில் இப்பிரச்சினையை அணுகியதால் இது சம்பந்தமான உடன்பாடு காணப்படவில்லை. இருந்தாலும் கூட ஜுன் 14 ம் திகதி மீண்டும் சந்தித்து இது பற்றி மேலும் ஆராய்வதாக இணக்கம் காணப்பட்டது. இணக்கம் காணப்பட்ட விடயங்களில் எவ்வகையில் இரு தரப்பினரும் மேலும் செயற்பட முடியும் என்பது பற்றியும் ஆராய்வதாக முடிவானது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் வ. மு. உ. அமைப்பின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைக் கான நிகழ்ச்சி நிரல் ஒன்றை சி.ல.மு. காங்கிரஸ் பிரதிநிதிகளிடம் கையளித்தனர். அதில் பின்வரும் அம்சங்கள் வலியுறுத்தப் பட்டிருந்தன.

1. வட மாகாணம் முஸ்லிம்களுக்கு தாயகமாக அமைந்துள்ளதென்றும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டாலும் கூட கண்ணியத்துடனும் சுய மரியாதையுடனும் மீண்டும் அவர்கள் தலைமுறை தலைமுறையாக



படிப்பகம்

padippakam



வாழ்ந்த பிரதேசங்களில் வாழும் உரிமை அங்கீகரிக்கப்படுவதுடன் தீவிரமாக செயல்படுத்தப்படவேண்டும்.

2. முஸ்லிம்கள் மீண்டும் தத்தமது பிரதேசங்களில் மீளக்குடியேறும் பொழுது அவர்களுடைய இழந்த சொத்துக்கள் அவற்றை மீட்க முடியாத பட்சத்தில் அதற்கான நஷ்டஈடு சேதங்களுக்குள்ளான கட்டிடங்களின் புனரமைப்பு முதலியனவும் இணைந்ததாக அமைய வேண்டும்.

3. அரசியல் காரணங்களுக்காக வன்முறையில் வெளியேற்றப்பட்ட வட மாகாண முஸ்லிம்கள் 'அகதி' களாக கணிக்கப்பட்டு U.N.H.C.R. போன்ற சர்வதேச ஸ்தாபனங்களினால் அங்கீகரிக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

4. அரசியல்ரீதியான அதிகாரப் பரவலாக்கங்களில் வடமாகாண முஸ்லிம்கள் எவ்வாறு செறிந்து வாழ்ந்து வந்தார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளப்பட்டு அதற்கு ஏற்ப அரசியல் ரீதியான பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்.

(அ)வடமாகாண முஸ்லிம்கள் வடக்கிலேயே பொருளாதாரத்தில் முற்று முழுதாக தங்கியிருப்பது பற்றியும் இக் கலந்துரையாடல் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

(ஆ) வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு வடமாகாண முஸ்லிம்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஒரு மாற்று அரசியல் தீர்வை முன்வைக்கவுள்ளதால் இது பற்றி வட மாகாண முஸ்லிம்கள் மத்தியிலே (புத்தளம் மாவட்டத்தில்) ஒரு கையெழுத்து வேட்டை மூலம் அவர்களது அங்கீகாரத்தையும் பெற்றிருப்பதால் இதனை அரசியல் பாதுகாப்புக்களில் உறுதிப்படுத்த சி. ல. மு. காங்கிரஸ் தன்னால் இயன்றவகையில் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டும்.

## இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை

**காலம்:** 14.06.1995

**இடம்:** துறைமுகம் கப்பல் துறை அமைச்சு

**நேரம்:** இரவு 7.30 – 8.30

**சி. ல.மு காங்கிரஸ் சார்பில் கலந்து கொண்டோர்:** *ரவுப்ஹகீம் எம்.பி, எம். எம் சுஹைர் எம்.பி, எம்.ஐ.எம். முஹியத்தீன், எம். டி. ஹஸன்அலி, எஸ். எம் யாஸீன், யூ எம். ஹனீபா.*

**வ.மு. உ அமைப்பின் சார்பில் கலந்து கொணடோர்:** *எஸ். எச் ஹஸ்புல்லாஹ், பி. ஏ. எஸ்.சுப்யான், ஏ.எம்.எம்.அமீன், எஸ் எம். ஏ. நியாஸ், எம்.எம்.மன்சூர், எம். வை. பஷீக்.*

பேச்சு வார்த்தையின் ஆரம்பத்தில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களின் 'அகதி' அந்தஸ்து சம்பந்தமாக ஆராயப்பட்டு பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டது.

1. சி.ல.மு காங்கிரஸ், பாராளுமன்றத்தில் வடமாகாணத்திலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்களுக்கு **அகதி அந்தஸ்து** வழங்க வேண்டும் என்ற தனி நபர் பிரேரணையை கொண்டு வருதல்.

2. புனர் வாழ்வு புனர் அமைச்சின் மூலம் தேசிய சர்வதேச மட்டங்களில் வட மாகாண முஸ்லிம்களின் பிரச்சினையையும் பரிதாப நிலையையும் வலியுறுத்தல்.

3. சி.ல.மு.காங்கிரஸ் முஸ்லிம் நாடுகளுடனும் ஐ. நா. போன்ற சர்வதேச ஸ்தாபனங்கள் மூலமும் வடமாகண முஸ்லிம்களின் பிரச்சினைகளை சர்வதேசமயப்படுத்தல்.

இக் கலந்துரையாடலின் போது வட மாகாண முஸ்லிம்களுக்கு புதிய அரசியல் சீர்திருத்தத்தில் எவ்வாறான பாதுகாப்புகள் வழங்க முடியும் என்பது பற்றி ஆராயப்பட்டு எவ்வித இணக்கமும் இரு சாரருக்கிடையில் காண முடியாத நிலையில் , மீண்டும் கட்சியின் தலைவரும், கௌரவ அமைச்சருமான எம் . எச்.எம். அஷ்ரப் தலைமையிலான,சி.ல.மு. காங்கிரஸ் குழுவுடன் சந்திப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.



படிப்பகம்

padippakam



## மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தை

**காலம் :** 29. 06. 1995

**இடம்:** துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சு

**நேரம்:** இரவு 7.30 – 8.45

**சி.ல.மு.காங்கிரஸ் சார்பில் கலந்து கொண்டோர்:** முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச் எம்.அஷ்ரப், ரவூப் ஹகீம் எம்.பி. அதாவுல்லாஹ், எம். டி. ஹஸன் அலி, எஸ். எம் யாஸீன், யூ. எம். ஹனீபா, மசூர் மௌலானா.

**வ. மு. உ. அமைப்பின் சார்பில் கலந்து கொணடோர்:** எஸ் எச் ஹஸ்புல்லாஹ், பி ஏ. எஸ் சுப்யான், ஏ. எல் புர்ஹானுத்தீன், எம். எம் அமீன், ஏ.ஸ.எச்.றிஸ்னி, எம். ஏ. கலிலுர்ரஹ்மான், எம். எம் மன்சூர், எஸ் ஜபருல்லாஹ், எம். வை. பாரூக், என். மசூத்.

**விஷேட பார்வையாளர்கள்:** ஏ. எல். எம். இப்ராஹிம் மௌலவி (பேராதனைப் பல்கலைக்கழக அறபு, இஸ்லாமிய நாகரீகத்துறை விரிவுரையாளர்) ஏ. எம். எம். மன்சூர் (பணிப்பாளர், அஸ்ஸபியா பவுன்டேசன்.)

வ. மு. உ. அமைப்பு வடமாகாண முஸ்லிம்களின் அவலநிலை பற்றி ஓர் அறிக்கை சமர்ப்பித்தது. வாய்மூலமும் அது பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. கௌரவ அமைச்சர் அவர்கள் தவிக்கும் வட மாகாண முஸ்லிம்களின் பரிதாப நிலையை அனுதாபத்துடன் செவிமடுத்து, தானும் தமது அமைச்சும் பாதிக்கப்பட்ட வட மகாண முஸ்லிம் களின் நிலையை உயர்த்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக வாக்குறுதியளித்தார்.

### அகதிகளின் நிலை

அகதி முகாம்களில் வாழும் முஸ்லிம்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் முடியுமானவரை அகதி முகாம்களை வேறு பொருத்தமான இடங்களுக்கு மாற்றுவதற்கு U.N.H.C.R. போன்ற தொண்டர் ஸ்தாபனங்களின் கவனத்திணை ஈர்ந்து மேலும் உதவிகளை பெறுதல்.

### அகதிகளின் அந்தஸ்து

கௌரவ அமைச்சர் அவர்கள் வெளியேற் றப்பட்ட வட மாகாண முஸ்லிம்களை "இடம் பெயர்ந்தவர்கள்" என்ற நிலையிலிருந்து உயர்ந்த அந்தஸ்திற்கு மேலும் உயர்த்துவதற்கான தேசிய சர்வதேச மட்டங்களில் முயற்சியை மேற்கொள்ளுதல்

### விஷேட உரிமை

இடம் பெயர்ந்த முஸ்லிம்களின் கல்வி, வேலை வாய்ப்பு உரிமைகளைப் பேணிக்காக்க சர்வகலாசாலை அனுமதியில், வேலை வழங்களில் விஷேட ஒதுக்கீட்டு முறையில் பாதுகாப்பு வழங்கல்.

### ஜனாதிபதி ஆணைக்குழு

கௌரவ அமைச்சரின் சிபாரிசின் பேரில் வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் 1990 ஒக்டோபரில் பலவந்தமாக வெளியேற் றப்பட்டதற்கான காரணங்கள் சம்பந்தமாக விசாரிப்பதற்கும், அதனால் மக்களுக்கு ஏற்பட்ட தாக்கங்களின் விளைவுகளை ஆராய்வதற்கும் ஒரு விஷேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது.

### அதிகாரப் பரவலாக்கல்

சி. மு. காங்கிரஸ் சிபாரிசு செய்ய உள்ள தென் கிழக்கு முஸ்லிம் மாகாண சபையில் வட மாகாண முஸ்லிம்கள் செறிந்து வாழும் முசலி, எருக்கலம்பிட்டி போன்ற நிலப்பரப்புகள் உள்ளடக்கப்படமாட்டாது. தமிழ் கட்சிகளுடன் முஸ்லிம்களுக்கு முடியுமான வரை கூடுதலான பாதுகாப்பும் பிரதி நிதித்துவமும் அளிப் பதற்காக பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும். பேச்சுவார்த்தை களுக்கான விடையங்களில் மன்னார் மாவட் டத்தை இரு அங்கத்தவர் தொகுதியாக்குவது, சட்டசபையில் இரு பெரும்பான்மை முறையை அறிமுகப்படுத்தல். காணி பங்கீட்டில் சிறு பான்மை முஸ்லிம்களுக்கு 25%மான காணிவழங் குதல் முதலியவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும

### மீண்டும் சந்திப்பு

சி.ல.மு.காங்கிரஸும் வ. மு. உ. அமைப்பும் தேவைப்படும் பட்சத்தில் தொடர்ந்து சந்திக்கும் என்ற உறுதிமொழியை கௌரவ அமைச்சர் அவர்கள் வழங்கினார்.



படிப்பகம்

padippakam



# தமிழர் விடுதலைக் கூட்டணியுடனான பேச்சுவார்த்தை

## முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை

**காலம் :** 20.06.1995

**இடம் :** த. வி கூ. தலைமைக் காரியலயம்

**நேரம் :** மலை 4.00 - 6.00 மணி

**த.வி கூட்டணி சார்பில் கலந்து கொண்டோர்** டி. சிவதிதம்பரம் ( தலைவர்) ஏ. தங்கத்துரை எம்.பி, என். திருச் செல்வம் எம். பி ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி,பி.செல்வராஜா எம்.பி, துரைராசிங்கம், எம்.பி. ஆனந்தசங்கரி.

**வ. மு. உ அமைப்பின் சார்பில் கலந்து கொண்டோர்** எஸ். எச். ஹஸ்புல்லாஹ், பி. ஏ. எஸ் சுப்யான், எஸ் எச். ரிஸ்னி, ஏ. எல் புர்ஹானுத்தீன், எம். எம். மன்சூர்.

வ. மு உ. அமைப்பின் தூதுக் குழுவினர், கூட்டணிக் குழுவினரிடம் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு வ. மு. உ. அமைப்பு முன்வைத்த யோசனைகளை விளக்கமாக எடுத்துரைத்தனர். வ. மு. உ. அமைப்பின் தலைவர் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட வட மாகாண முஸ்லிம்கள்மீண்டும் அவர்கள் வாழ்ந்த பிரதேசங்களில் மீளக் குடியேறும் போது அவர்களுக்கான பாதுகாப்பு களும் அரசியல் ரீதியான அவர்களுக்கான பிரதிநிதித்துவ்மும் வட மாகாண முஸ்லிம்ளின் உடனடி அபிலாசைகளாக இருந்து வருவதாகக் கூறினார்.

மேற்படி விடயங்கள் பற்றி இரு தரப்பினர் களுக்கும் பேச்சு வார்த்தைகள் சுமுகமான முறையில் இடம் பெற்றதுடன் கொள்கை யளவில் பாராளுமன்றத் தூதுக் குழுவிற்கு வ. மு உ. அமைப்பு முன் வைத்த கோரிக்கைகள் நீதியானதும் நியாயமானதும் என ஏற்றுக் கொண்டனர்.

பின்வரும் விடயங்களில் இரு தரப்பினர் களுக்கு மிடையில் இணக்கம் காணப்பட்டது

1. வட மாகாணமே, பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட வட மாகாண முஸ்லிம்களின் பூர்வீக பூமி.
2. அந்நியொன்னியமாக வாழ்ந்த வட மாகாண முஸ்லிம் சமூகத்தை வெளியேற் றியமை ஒரு திட்டமிட்ட பலாத்காரச் செயலே.
3. வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் காலதாமதமின்றி அவரவர் பிரதேசங்களில் மீளக் குடியேற்றப்பட்டு பொருத்தமான புனர் வாழ்வு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.
4. வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட சொத்துக்களுக்கான நஷ்டஈடுகள் நியாயப்படி வழங்கப்படவேண்டும்.
5. முன் வைக்கப்படவுள்ள புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தங்களில் வட மாகாண முஸ்லிம் சிறுபான்மையினருக்கு முடியுமான பாதுகாப்பும் பிரதிநி தித்துவமும் உறுதிப்படுத்த வேண்டும்.
6. இரு தரப்பினரும சி. ல. மு. காங்கிரஸும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் நடத்தும் இறுதிப் பேச்சு வார்த்தையின் முடிவு களின் பின் 30 ம் திகதி மீண்டும் சந்திப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.



படிப்பகம்

padippakam



## இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை

**காலம்:** 30. 06. 1995

**இடம்:** த.வி.கூட்டணி தலைமைக் காரியாலயம்

**நேரம்:** மாலை 4.00 – 5.00 மணி

**த. வி. கூட்டணி சார்பில் கலந்து கொண்டோர்:** டி.சிவசிதம்பரம் (தலைவர்) வீ. ஆனந்தசங்கரி

**வ. மு. உ. அமைப்பின்சார்பில் கலந்து கொண்டோர்** எஸ். எச். ஹஸ்புல்லாஹ், பி. ஏ. எஸ் சுப்யான், எம். எம் மன்சூர், எஸ். எச். ரிஸ்னி, எம். ஏ. கலிலுர்ரஹ்மான் எம். வை. பாருக்.

வ. மு உ. அமைப்பினர் த. வி. கூட்டணியின ரிடம் 29.06.1995 ல் சி. ல. மு காங்கிரஸுடன் நடத்திய சந்திப்பு பற்றி விபரித்தனர் கூட்டணியும் சி. ல. மு காங்கிரஸுடன் தாம் நடத்திய பேச்சுவாத்தை பற்றி வ. மு. உ. அமைப்பினரிடம் எடுத்துக் கூறினர்.

இரு தரப்பினரும் வட மாகாண முஸ்லிம்கள் சம்பந்தமாக நடத்தப்பட்டுவரும் பேச்சு வார்த்தை சம்பந்தமாக திருப்தி கண்டனர்.

வ. மு உ. அமைப்பு த. வி. கூட்டணியிடம் ஒரு விஷேட வேண்டுகோள் விடுத்தது. அதாவது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக கூட்டணி ஏனைய கட்சிகளுடன் நடத்தும் பேச்சு வார்த்தைகளில் வட மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும் என்பதாகும். இதற்கு கூட்டணி இணக்கம் தெரிவித்தது.

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் பிரிவுடன் பேச்சுவார்த்தை

**காலம்:** 05. 07. 1995

**இடம்:** கௌரவ அமைச்சர் ஏ. எச் எம். பௌசி அவர்களுடைய பாராளுமன்றக் காரியாலயம்

**நேரம்** பி.ப. 1.30 – 2.30.

**சி.சு.க.முஸ்லிம் பிரிவின சார்பில் கலந்து கொண்டோர்:** கௌரவ அமைச்சர் ஏ. எச். எம் பௌஸி, கௌரவ பிரதி அமைச்சர் எஸ். ஏ. அலவி மவ்லானா

**வ. மு. உ. அமைப்பின் சார்பில் கலந்து கொண்டோர்:** எஸ் எச். ஹஸ்புல்லாஹ் பி. ஏ. எஸ், சுப்யான், எஸ். எம். ஏ. நியாஸ், எம். எம் மன்சூர், பி.எம்.றிஸ்வான்

வ. மு. உ. அமைப்பு வட மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள், எதிர் பார்ப்புகள் மற்றும் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் சார்பில் வ. மு. உ. அமைப்பு எடுத்த நடவடிக்கைகள் பற்றியும் முன்வைத்தது.

கௌரவ அமைச்சர்கள் வட மாகாண முஸ்லிம்களின் அவல நிலையைப்பற்றி அனுதாபத்துடன் செவிமடுத்ததுடன் பின்வரும் விடையங்களில் தங்களது ஆதரவையும் நல்குவதாக உறுதியளித்தனர்.

1. வட மாகாண முஸ்லிம்ளின் ஏக பிரதிநிதிகளாக வ. மு. உ. அமைப்பை அங்கிகரித்தல்
2. இனப்பிரச்சினை சம்பந்தமாகவும் அதற்கான தீர்வு சம்பந்தமாகவும் எதிர்காலத்தில் பேசப்படும சந்தர்பங்களில் வ. மு. உ. அமைப்பின் பிரதிநிதிகளை இதில் கலந்துகொள்ள உறுதிப்படுத்தல்.



படிப்பகம்

# அதிகாரப் பரவலாக்கல்

## மக்கள் எண்ணம்

வடக்கைப் பொறுத்தவரையில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என்ற ஐந்து நிருவாக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட் டுள்ளது. இவற்றில், மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் முஸ்லிம் பிரதேசச் செயலாளர் பிரிவுகளை அமைப்பதற்கு ஏதுவாக முஸ்லிம் கிராமங்களை ஒன்றிணைக் கக் கூடியவாறு முஸ்லிம் குடியிருப்புக்கள் அமைந்துள்ளன.

அவை பின்வருமாறு:-

### 1. மன்னார் மாவட்டம்

i முசலிப் பிரதேசச் செயலாளர் பிரிவு: இது தற்பொழுது இங்குள்ள முஸ்லிம் கிராமங்களை ஒன்றிணைத்துள்ளது. இப்பிரதேசம் பெரிய விசால முடையதாக இருப்பதனால், முசலிப் பிரிவு, முசலி வடக்கு பிரதேசசபை, முசலி தெற்கு பிரதேசசபை என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முசலி வடக்கு பிரதேச சபை P.P பொற்கேணியை மையமாகவும், முசலி தெற்கு பிரதேச சபை சிலாவத் துறையை மையமாகக் கொண்டும் இயங்க முடியும்.

ii எருக்கலம்பிட்டிப்பிரிவு :- இது தற்போது மன்னார் பிரதேசசபையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இவற்றில் எருக்கலம்பிட்டியை மையமாகக் கொண்டு இதனுடன் இணைக்கக் கூடியதாகவுள்ள தாறாபுறம், புதுக்குடியிருப்பு, கருசல், கீரி ஆகிய கிராமங்களை இணைத்து புதிய சபை யொன்று உருவாக்க முடியும்.

111. விடத்தல் தீவு பிரிவு:- விடத்தல் தீவை மையமாகக் கொண்டு பெரியமடு, மினுக்கன், வினாங்குளி ஆகிய கிராமங் களை இதனுடன் இணைத்து புதிய பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படலாம்.

### 2. முல்லைத்தீவு மாவட்டம்

இம்மாவட்டத்திலுள்ள தண்ணீரூற்றை மையமாகக் கொண்டு, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம் ஆகிய கிராமங்களை இணைத்து ஒரு பிரிவு உருவாக்கப்படல் வேண்டும்.

### 3. யாழ்ப்பாண மாவட்டம்

யாழ்ப்பாணம் முஸ்லிம் சோனக தெருவை மையமாகக் கொண்டு யாழ்ப்பாணம் நகர முஸ்லிம் குடியிருப்புகளை ஒன்றிணைத்து புதிய பிரிவு ஒன்று அமைக்க முடியும்.

4. இவை தவிர்ந்த ஏனைய முஸ்லீம் கிராமங்களை முஸ்லிம் கிராம சேவையாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அக்கிராம சேவையாளர் பிரிவுகளை அம்மக்களே நிருவகிக்கக் கூடியவாறு அதிகாரப் பரவலாக்கல் ஏற்படுத்தப்படல் வேண்டும். வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங் களுக்கும் இதே முறையான அலகுகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

### 5. சட்டசபை உறுப்புரிமை

மேற்சொன்னவாறு ஒவ்வொரு மாவட்டத்திலும் அமையப் பெறும் முஸ்லிம் பிரிவுகளில் இருந்து ஆகக் குறைந்தது ஒரு

padippakam



உறுப்பினராவது சட்டசபை பிரதி நிதித்துவம் பெற ஆவண செய்யப்படல் வேண்டும்.

இவை தவிர வவுனியா, கிளி நொச்சி ஆகிய இரு மாவட்டங்களிலுமுள்ள முஸ்லிம்களை பிரதி நிதித்துவம் வகிக்கக் கூடியவாறு தேர்தல் மூலமோ, நியமன அங்கத்தவர் முறை மூலமோ தலா ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு உறுப்பினர் நியமனம் பெறல் வேண்டும்.

## 6. பாராளுமன்ற பிரதிநிதித்துவம்:

மொத்த சனத்தொகையில் 30% முஸ்லிம்களை உள்ளடக்கிய மன்னார் மாவட்டத்தில் இருந்து ஒரு முஸ்லிம் பிரதிநிதி பாராளுமன்றம் செல்லக் கூடியவாறு இரட்டை அங்கத்தவர் தொகுதி முறை ஏற்படுத்தப்படல் வேண்டும்.

அத்தோடு வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து அதாவது வன்னி தேர்தல் மாவட்டத்தில் இருந்தும் ஒரு முஸ்லிம் உறுப்பினர் பாராளுமன்றம் செல்ல வாய்ப்பளிக்கப்படல் வேண்டும். இது தேர்தல் முறையிலோ, நியமன முறையிலோ அமைதல் வேண்டும்.

## 7. சட்டசபை அமைச்சர் பதவி

உத்தேச சட்ட சபையில் வடக்கு முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் "கெபினற்" அமைச்சராக நியமிக்கப்படல் வேண்டும்.

8. தற்பொழுது பிரதேசச் செயலாளர் பிரிவு அல்லது பிரதேச சபை என அழைக்கப்படும் முறை மாற்றப்பட்டு பிரதேச மக்கள் ஆட்சி மன்றம், எனவும், கிராம சேவையாளர் பிரிவுகளில் ஏற்படுத்தப்படும் சபைக்கு கிராமாட்சி மன்றம் எனவும் பெயரிடப்படலாம்.

இங்ஙனம் தெரிவாகும் நிருவாக முறையில் வடக்கு முஸ்லிம்களின், பாதுகாப்பு, கலை கலாச்சாரம், கல்வி என்பனவற்றுக்கான உறுதியுரை வழங்கப் படல் வேண்டும், அத்தோடு வடக்கு முஸ்லிம்கள் தனித்துவமான இனமாக கணிக்கப்பட்டு வடக்கு முஸ்லிம்களின் தாயகமும் வடக்கே என அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

## 9. பாதுகாப்பு ஒழுங்கு

உத்தேச புதிதாக உருவாக்கப்படும் முஸ்லிம் பிரதேச சபைகளில் ஒவ் வொன்றிலும் பொலிஸ் நிலையங்கள் நிறுவப்பட்டு இந்நிலையங்களில் 60% வீதத்திற்கு அதிகமான முஸ்லிம்கள் பொலிஸ்படையிலும், இந்நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் முஸ்லிம்களுமாக நியமிக்கப்படல் வேண்டும். மாகாண மட்டத்தில் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கென 20% வீதமான முஸ்லிம்களை பொலிஸ் படையில் நியமிக்கலாம்.

## 10. பிரதேச சபை நிருவாக அதிகாரிகள்

ஒவ்வொரு பிரதேச சபையினதும் நிருவாக அதிகாரியாக முஸ்லிம் ஒருவரே நியமிக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு முஸ்லிம்களை நியமிக்குமாறு வேண்டுவது தமிழ் மக்கள் மீதான நம்பிக்கையீனமல்ல, முஸ்லிம்களின் உரிமைகளை பேணுவதற்கும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் கடந்த கால சம்பவங்களால் தமிழ் மக்கள் மீதான வெறுப்புணர்வை நீக்கி பல்லாண்டு காலமாக பேணப்பட்டு வந்த வடக்கு முஸ்லிம் களினதும், தமிழர்களினதும் நல்லுறவை பேணுவதற்கும் வளர்ப்பதற்கும் வாய்ப் பளிப்பதற்குமாகும்.

இப்படியான ஒரு ஆட்சி முறையை ஏற்படுத்துவதன் மூலம் தமிழ், முஸ்லிம் உறவு எதிர்காலத்தில் எந்த வகையிலும் பாதிக்கப்படாத வண்ணம் பாதுகாப்பளிக்கக் கூடியதாக இருக்கும்.

***A.S ஹாஜாமகுதூம் கிராம சேவையாளர் மன்/ வேப்பங்குளம்.***



படிப்பகம்

padippakam



# அதிகாரப் பரவலாக்கலும் பிரதேச ஆட்சிமுறையும்

அண்மையில் அதிகாரப் பரவலாக்கலின் கீழ் மத்திய அரசு தன்னிடம் வைத்துக் கொள்ளும் அதிகாரங்கள் எவை பிரதேச சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் எவை என்ற கொள்கை விபரங்களும் பிரதேச ஆட்சி அமைப்புக்கான பிரதேசசங்கங்களைக் காட்டும் வரைபடமும் பிரசுரமாகின.

பெரும்பான்மை இனத்தைப் பொறுத்த மட்டில் பிரதேசங்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் பொருத்த முடையதாக இருந்தாலும் ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழக் கூடிய சிறுபான்மை மக்களுக்கான தக்க பாதுகாப்புகள் விபரமாகவோ அல்லது சுருக்கமாகவோ கொடுக்கப்படாமை ஒரு பெரும் குறைபாடாகவே இருக்கின்றது. இன்று ஒற்றை ஆட்சியாக இருக்கையிலேயே சிறுபான்மை மக்கள் பல இன்னல் களுக்குள்ளாகியுள்ளது வரலாறு கண்ட உண்மையாகும். எனவே சிறுபான்மை மக்களின் உரிமைகள் தக்க முறையில் பாதுகாக்கப்படுவதற்கான உத்தரவாதம் கொடுக்கப்படல் வேண்டும். அத்தகைய பாதுகாப்பு மத்திய அரசாங்கத்தின் அதிகார முடையதாகவும் இருப்பது தான் பொருத்த மானது.

அண்மையில் தரப்பட்ட அதிகாரப் பரவலாக்களின் கீழ் சிறுபான்மையோரின் உரிமைகள் எங்கனம் பாதுகாக்கப்படும் என்பது கொடுக்கப்படாமை ஒரு பெரும் குறையே.

இரண்டாவதாக மத்திய அரசின் பொலிஸ்மாஅதிபர் எக்காரணங்களுக்காக தனது அதிகாரத்தை ஒரு பிரதேசத்தில் விநியோகிக்க முடியும் என்ற விளக்கமும் கொடுக்கப்படாமையும் ஒரு பெரும் குறையே பிரதேச ஆட்சியின் பொலிஸ் மா அதிபருக்கும் மத்திய ஆட்சியின் பொலிஸ் மா அதிபருக்கும் எவ்வித தொடர்புமே இல்லாத வேளை, அவை தனித்துத் தன்னிச்சையாகத் தொழிற்படுகையை, இரண்டு பொலிஸ் அமைப்புக்கும் எவ்வித தொடர்பும் இல்லாதிருக்கையில் எங்கனம் மத்திய அரசு தனது அதிகாரத்தைப் பிரயோகித்துச் சிறுபான்மை மக்களைப் பாதுகாக்க முடியும் என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

இன்று இந்தியாவிற் கூட சிறுபான்மை மக்களான முஸ்லிம்கள் பலவகையான இன்னல்களுக்குள்ளாகியிருப்பது உலகறிந்த உண்மை. முஸ்லிம்கள் பம்பாயிலும் அயோத்தியிலும் நசுக்கப்பட்டு பலியாக்கப் பட்டனர். அயோத்தியில் இருந்த பெரும் மஸ்ஜித் தரைமட்டமாக்கப்பட்டது. அதிகாரத்தை தன்னகத்தே வைத்துள்ள மத்திய அரசினால் அவற்றைத் தடுத்து நிறுத்த முடியாமற் போய் விட்டதே. அப்படியாயின் அதிகாரமே இல்லாத மத்திய ஆட்சி எப்படித்தான் பிரதேச ஆட்சியின் கீழ் வாழும் சிறுபான்மை மக்களைப் பாதுகாக்க முடியும்.?

நாட்டின் சமாதானம் முக்கியம் தான் சமாதானமிருந்தால்தான் ஒரு நாடு செழிப்படையும், பொருளாதாரம் வளரும், மக்கள் நிம்மதியாக வாழ முடியும். இதற்காக அரசாங்கம் சிறு பான்மை மக்களைப் பலி கொடுத்து விடக்கூடாது. எனவே தான் நாட்டின் சகல பிரதேசங்களிலும் வாழும் சிறுபான்மை மக்கள், அவர்கள் எவராக இருந்தாலும் (சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பரங்கியர்) அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரம் மத்திய அரசிடமிருப்பது இன்றியமையாத தாகும்.

அடுத்துப் பிரசுரிக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுடன் இணைக் கப்பட்ட பிரதேசப் பிரிவினைகளையும் சற்று நோக்க வேண்டும். நம் நாட்டில் ஒன்பது மாகாணங்கள் இருப்பது போல் ஒன்பது பிரதேசங்கள் அமைக்கப்பட்டு அதிகாரங்கள் பரவலாக்கப்படுகின்றன. வடகிழக்கு



படிப்பகம்

padippakam



மாகாணங்களில் மாத்திரமே மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளமை அதிற் காணப் படுகின்றது. வடக்கும் கிழக்கும் இணைக்கப்படும் அதேவேளை அம்பாறைத் தேர்தல் தொகுதி தவிர்ந்த ஏனைய பிரதேசங்களைக் கொண்ட தற்போதைய அம்பாறை மாவட்டம் தென்கிழக்குப் பிரதேசமாக முஸ்லிம்கள் பெரும் பான்மையான பிரதேசமாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

இங்ஙனம் ஒரு பிரதேசத்தைப் பிரித்து முஸ்லிம்களுக்குக் கொடுப்பதன் மூலம் தூரதிஸ்டியற்ற, தன்னலமிக்க அரசியல் வாதிகளையும் கட்சிகளையும் திருப்திப் படுத்தலாமே தவிர முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி விடமுடியாது.

கிழக்கு மாகாணத்தையும் வடக்கு மாகாணத்தையும் பொறுத்த மட்டில் அப்பிரதேசங்களில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றித்து பின்னிப் பிணைந்தே வாழ்ந்தார்கள்? இவ்வாறே தான் வட மாகாண தமிழ் மக்களுடன் முஸ்லிம்கள் வாழ்ந்தனர். குறுகிய மனப்பான்மையும் அதிகார ஆசையும் கொண்ட அரசியல் வாதிகளின் பேச்சுக் களாலும் செயல்களாலும் நடவடிக்கை களாலுமே இரு சமூகங்களுக்குமிடையே கசப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது என்று துணிந்து கூறலாம். எனவே முஸ்லிம்கள் எவ்வாறு ஏனைய ஏழு மாகாணப் பிரதேசங்களிலும் சிங்களவரோடிணைந்து வாழ்கின்றனரோ அங்ஙனமே வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம்கள் தமிழரோடிணைந்தே வாழ வேண்டும்.

தமிழரும் முஸ்லிம்களும் இணைந்து வாழ வேண்டுமென்பதனால் வடக்கும் கிழக்கும் இணைய வேண்டிய அசியமில்லை. அம்பாரைத் தேர்தல் தொகுதி, சேருவில தேர்தல் தொகுதி என்பன கிழக்கிலிருந்து வேறுபடுத்தப்படுமானால் வடகிழக்கு இணைய வேண்டுமென்று கேட்பது அசியமில்லாது போய் விடும். இவ்விரு தொகுதிகளும் இருந்தால் தமிழ் மக்களின் பாதுகாப்பு, காணிப் பாதுகாப்பு என்பன பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற ஒரு காரணத்தாலேயே தமிழ் அரசியல் வாதிகள் இரு மாகாணங்களின் இணைப்பையும் வலியுறுத்தி வந்துள்ளனர். எனவே புதிய திட்டத்தின் அடிப்படையில் சிங்கள மக்கள் பெரும் பான்மையாக உள்ள இரு தொகுதிகளும் நீக்கப்படுகையில் வடக்கும் கிழக்கும் தனித்தனி பிரதேசங்களாக இருப்பதே கிழக்கு மக்களின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் உதவுவதாகும். இத்தகைய நிலையில் ஒரு முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசமே அவசிய மற்றதாகி விடும்.

சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பார்வையில் வடக்கிலும் கிழக்கிலும் மாத்திரமே முஸ்லிம்கள் சிறுபான்மையோர் எனக் காணப்படுகின்றது. ஏனைய பிரதேச முஸ்லிம்களின் பாதுகாப்பைப் பற்றி அவர்கள் என்னதான் கருதுகின்றார்கள்? கண்டி, கேகாலை, குருநாகலை, பொலனறுவை, அநராதபுரம், புத்தளம், கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி முதலான மாவட்டங்களிலும் கனிசமான அளவு முஸ்லிம்கள் வாழ்வது காங்கிரஸ் தலைவர்களுக்குத் தெரியாத உண்மைகளாக இருக்க முடியாது. எவ்வாறு முஸ்லிம் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ முடியும் என்று காங்கிரஸ் நினைக் கின்றதோ அதே வண்ணம் தமிழருடனும் முஸ்லிம் மக்கள் இணைந்து வாழ முடியும் என்று கருத வேண்டும். எதற்காகத் தமிழ் மக்கள் பெருமளவு வாழும் இரு மாகாணங்களிலும் மாத்திரம் முஸ்லிம்களுக்கு ஒரு தனி அமைப்பு ஒரு தனி ஆட்சி ஒரு தனிப்பிரதேசம் இது அவசியந்தானா? இது சிந்திப்பவர்களுக்கு உண்மையை எடுத்து நன்றாகக் காட்டும். தமது கட்சி ஆதிக்கங் கொண்டுள்ள இரண்டே இரண்டு மாகாணங்கள் வடக்கும் கிழக்குமே. இப்பிரதேசங்களிலேயே தமது ஆதிக்கத்தை நிலை நாட்ட வேண்டும் என சி.ல.மு. காங்கிரஸ் கருதுவதாகவே இருக்க வேண்டும்.



படிப்பகம்

padippakam



அண்மைக் காலத்தில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு மத்தியில் ஏற்பட்ட சில மனக் கசப்புகள் தமது அபிலாசைகளை நிலை நாட்டுவதற்கு சி.ல.மு. காங்கிரஸிற்கு நன்கு உதவுவதாக இருக்கின்றது. தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியிலே ஏற்பட்ட மனக்கசப்பு கொலை என்பதனை ஆராய்வதற்காக ஓர் ஆணைக்குழுவை நியமித்து ஆராய்ந்தால், சகல காரணங்களும் உண்மைகளும் யாருடைய மேடைப் பேச்சுக் காரணமாக அவை எற்பட்டன என்பதும் புலனாகும்.

தமிழ் மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்புப் பற்றி அக்கறை கொண்டுள்ள மு.காங்கிரஸ் ஏனோ தான் ஏனைய மாகாண முஸ்லிம்களை மறந்து விட்டது. அவர்களின் பாதுகாப்புக்கு யாது செய்துள்ளது. மேலே கூறிய பிரதேசங்களில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் சகல பிரதேசங்களையும் தன்னகத்தே அடக்கிய ஒரு பிரதேச சபையைத் தானும் அரசிடம் கேட்டதா? இதிலிருந்து உண்மையை நாம் அறிந்து கொள்ள முடியுமே. இந்தச் சிங்கள மக்கள் வாழும் மாகாணங்களில் வாழும் முஸ்லிம்கள் மத்தியில் தமக்குச் செல்வாக்கில்லை அப்பிரதேசங்களில் தமது கட்சியின் ஆட்சியை நிறுவமுடியாதே என்பதுதான்.

எனவே நாடு முழுவதும் பரவலாக வாழும் முஸ்லிம்களுக்கு ஆட்சி அவசிய மில்லை. முதல் அமைச்சர் பதவியும் தேவையில்லை. எமக்கு வேண்டியதெல்லாம் எமது பாதுகாப்பே முஸ்லிம்கள் பிரிவினை வாதிகளுமில்லை. நாடு தேவைப்பட்டவர் களுமல்லர். நாம் சிங்கள மக்களுடனும் தமிழ் மக்களுடனும் இணைந்து பாதுகாப்பாக வாழ்ந்தாற் போதும்.

*A.L இஸ்மாயில்*
*கொழும்பு*

## "495 அகதிமுகாம்களில் 1,64,306 பேர் உள்ளனர்"

வடக்கு-கிழக்கு யுத்தம் காரணமாக வடக்கு கிழக்கிலும் புத்தளம் அநுராதபுரம் மாவட்டங்களிலும் 495 அகதிமுகாம்கள் இயங்கி வருகின்றன. இங்கு ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 306 பேர் தங்கியிருப்பதாக புனர்வாழ்வு, புனரமைப்பு கப்பல் துறை முகங்கள் அமைச்சு வெளியிட்ட புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வருகிறது.

மூன்று லட்சத்து 59 ஆயிரத்து 896 பேர் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் , வாடகை வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்திலும், யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களிலும், சில பகுதிகளிலும், அவசர புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 1988ஆம் ஆண்டு முதல் 1994 டிசம்பர் மாதம் வரை 19.1 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. கடந்த வருடம் ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை 1621 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்வு கொடுப்பனவு, உற்பத்தி திறன் வாய்ந்த கொடுப்பனவு வீடைமைப்பு கொடுப்பனவு, அரச ஊழியர்களுக்காக இழப்பீடு போன்றன இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டன.

தற்போது 5லட்சத்து 42 ஆயிரத்து 51 நபர்கள் உலர் உணவு நிவாரணங்களைப் பெற்றுவருகின்றனர். மாதாந்தம் 200 மில்லியின் ரூபா இதற்காக செலவிடப்படுகிறது. அத்தியாவசிய சேவை ஆணையாளர் நாயகம் உலர் உணவு விநியோகத்திற்கு பொறுப்பாக உள்ளார்.



படிப்பகம்

padippakam



# மூன்றாவது ஈழப்போரும் வடமாகாண முஸ்லிம்களும்

எம்.எஸ்.எம். ஜான்ஸின்

கடந்த ஏப்ரல் 19ம் திகதி இடியுடன் இடியாக புலிகள் பீரங்கிப்படகுகளைத் தகர்த்ததுடன் அரசு புலிகளுக்கிடையிலான மோதல் மீண்டும் ஆரம்பித்துவிட்டது. சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்ற கால கட்டத்தில் வடமாகாண முஸ்லிம்களின் உள்ளத்தில் ஒரு நம்பிக்கை ஒளி தோன்றியிருந்தது. பீரங்கிப் படகுகளுடன் சேர்ந்து அந்த நம்பிக்கை ஒளியும் சுக்கு நூறாகிவிட்டது. தற்போது வடமாகாண முஸ்லிம்கள் தமது நம்பிக்கைகளை முற்று முழுதாக இழந்து போய் காணப்படுகின்றார்கள். எது எவ்வாறு இருப்பினும் வடக்கு தமது தாயகம் என்பது தான் அவர்களின் நிலைப்பாடு ஆகும். ஆனால் வடக்கில் இப்போது போய் மீண்டும் குடியேற முடியுமா என்பது பலத்த கேள்விக்குறியதாகும்.

வடக்கில் மீண்டும் போய் குடியேறுவது என்பது பல விடயங்களை கருத்தில் எடுத்து ஆராயப்பட வேண்டும். புலிகளைப் பொறுத்தவரை முஸ்லிம்களை வெளியேற்றியதற்காக கவலை கொண்டவர்களாக உள்ளனர். ஆனால் மீளக் குடியேற்றம் என்ற விடயத்தில் அவர்கள் விதிக்கும் நிபந்தனையானது அவர்கள் மீது சந்தேகம் கொள்ள வைக்கின்றது. வடக்கில் தீவுப்பகுதி மற்றும் வடமாராட்ச்சிப் பகுதிகளில் உள்ள இராணுவம் வெளியேறினால் அப்பகுதிகளுக்கு இப்பொழுது முஸ்லிம்களின் வீடுகளில் இருப்போர் திருப்பியனுப்பப்படுவர். அவர்கள் திரும்பிச் சென்றால் முஸ்லிம்கள் இங்கு வர அனுமதிக்கப்படுவர் என்பதாக புலிகள் கூறுகின்றனர். எனவே இவையெல்லாம் இப்போதைக்கு நடைபெறப்போகின்ற நிகழ்ச்சிகளா என்றால் இல்லை என்று தான் கூற முடியும். மறுபுறம் முஸ்லிம்களின் பாதுகாப்பு, பொருளாதாரம் என்பன உறுதிப் படுத்தப்படாத வரை அவர்கள் அங்கு போய் குடியேறப் போவதில்லை.

தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு நடைபெறப் போகும் இந்த யுத்தம் தமக்கு என்ன தீர்வை தரப்போகிறது என்பதுதான் அவர்களின் வினா. புலிகள் அடக்கப்படும் வரை யுத்தம் தொடரும் என்பதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே யுத்தம் தொடரப்போவது என்பது உறுதி. தமது பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படப் போகின்றது என்பது பற்றியே முஸ்லிம்கள் சிந்திக்கின்றார்கள். இந்நிலையில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ஜனாப் எம்.எச்.எம். அஷ்ரப் தேர்தல் காலத்திலும் அதன் பின்னரும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவாரா என்பதன் பக்கம் வடமாகாண முஸ்லிம்கள் திரும்பியுள்ளனர்.

"இனப் பிரச்சினையை தீர்க்கக்கூடிய திராணி சந்திரிகா அம்மையாருக்கு உண்டு. அதற்கு முன்னர் புலம் பெயர்ந்த மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவே சந்திரிகா-அஷ்ரப் உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினையை முதலில் தீர்க்காவிடின் ஒப்பந்தத்தை விலக்கவும் தயங்க மாட்டேன்". (06.08.94 வீரகேசரி). என்பதாக அமைச்சர் அஷ்ரப் அவர்கள் வாக்குறுதியளித்திருந்தார். புலம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை தீர்க்கப்படமுன் புலிகளுடன் பேச்சு ஆரம்பிக்கப்பட்டது. சமாதான பேச்சும் முறிந்து விட்டது. இப்போது அமைச்சர் தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பது தான் வடமாகாண முஸ்லிம்களின் அவா.



படிப்பகம்

padippakam



தொடரப்போகும் அர்த்தமற்ற யுத்தம் இன்னும் எவ்வளவு காலம் நடைபெறும் என்று கூற முடியாது. புலிகளும் பலம் வாய்ந்த அணியினர். அத்துடன் கெரில்லாத் தந்திரங்களும் அவர்களுக்கு நன்கு தெரியும். எனவே புலிகளை அழிப்பது என்பது இலகுவில் முடியாத காரியம். கெரில்லா யுத்தத்தை அழித்ததாக உலகில் வரலாறு எதுவும் கிடையாது. எனவே யுத்தம் இன்னும் ஐந்து அல்லது பத்து வருடங்கள் தொடரும் என வைத்துக் கொள்வோம். அந்த யுத்தம் முடியும் வரை வடமாகாண முஸ்லிம்களும் அகதி முகாம்களில் இருந்து கொண்டு காத்திருக்க முடியாது. ஒவ்வொரு அகதி ஆத்மாவும் தாங்க முடியாத சுமைகளை எல்லாம் தாங்கி விட்டது. யுத்தம் முடியும் வரை இழவு காத்த கிளியாக இருக்க முடியாது என்பது தான் அவர்களின் தற்போதைய நிலைப்பாடு. ஏனெனில் அகதி முகாம்களிலும் தனியார் வீடுகளிலும் வடக்கில் இருந்து புலம்பெயர்ந்தவர்கள் படும் அவஸ்தை அனுபவிக்கும் அவர்களுக்கு மட்டும் தான் தெரியும். ஓலைக் குடிசைகளில், சுகாதார சீர்கேடுகளுடன் அரசின் மனிதாபிமானமற்ற உதவிகளுடன் அவமான வாழ்க்கை வாழ்ந்து அலுத்துப் போயுள்ளார்கள்.

365 நாள்களுக்குள் அகதிகள் பிரச்சினை தீர்க்கப்படும் என்பதாக அமைச்சர் அஷ்ரப் அவர்கள் பதவிக்கு வந்த பின்னர் கூறினார். (தினகரன் 24.08.1994) அந்தக் காலக் கெடுவும் முடிவடைந்து விட்டது. அத்துடன் புனர் வாழ்வு அமைச்சு ஒரு வருடத்தினுள் ஒழிக்கப்படும் என்பதாகவும் கூறப்பட்டது. இப்போது வடமாகாண முஸ்லிம்கள் அமைச்சர் மீத சந்தேகம் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இந்த சந்தேகங்களை ஒழிக்க அமைச்சர் முன்வர வேண்டும்.

வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினை தனியாக அனுகப்பட வேண்டும். வடமாகாண முஸ்லிம்கள் இடம் பெயர்ந்தவர்கள் (DISPLACED) அல்ல. அவர்கள் இலங்கையின் ஏனைய இடம் பெயர்ந்தவர்களை விட வித்தியாசமானவர்கள். இரண்டு நாட்கள் முதல் இரண்டு மணித்தியாளங்கள் வரை அவகாசம் கொடுக்கப்பட்டு சகல உடமைகளும் பறிக்கப்பட்டு நிர்க்கதியாக ஆயுத முனையில் வெளியேற்றப்பட்டவர்கள். உரிமை கேட்டுப் போராடும் ஒரு சிறுபான்மையால் உரிமை மறுக்கப் பட்டவர்கள். எனவே அவர்களின் பிரச்சினை அகதிகள் (REFUGEES) என்ற வகையில் அனுகப் படவேண்டும். அவர்கள் தாம் இழந்தவை எல்லாவற்றையும் கேட்கவில்லை. தமக்கு நீதியான முறையில் புனர்வாழ்வு அளிக்குமாறு தான் கேட்கிறார்கள். அந்த உதவியானது அவர்களுடைய பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பக் கூடியதாக அமைய வேண்டும்.

ஒரு அகதி முகாமில் உள்ளவர்களை இன்னொரு அகதி முகாமுக்கு மாற்றி அதற்கு "குடியேற்றத் திட்டம்" என்று பெயரிட்டு 7,000 ரூபாய்க்கு ஒரு கொட்டில் அமைத்து அதில் குடியேற்றி விட்டால் அகதிப் பிரச்சினை தீர்ந்து விடும் என்பதாக சிலர் நினைக்கிறார்கள். அந்நடவடிக்கை சிலரால் வரவேற்கப்பட்டாலும் அது அகதிப்பிரச்சினைக்கு முழுமையான ஒரு தீர்வாக அமையாது. நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல் வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினை இடம்பெயர்ந்தவர்கள்' என்று அனுகப்படாமல் இடம்பெயர்க்கப் பட்டவர்கள் என்ற வகையில் அனுகப்பட வேண்டும்.

வவுனியா முஸ்லிம்கள் மீளக் குடியேற்றம் என்ற ரீதியில் மனிதாபி மானமற்ற உதவிகளை வழங்கி முன்னைய ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டது போன்று இவர்களும் ஏமாற்றப்படக் கூடாது. இவர்களுடைய புனர்வாழ்வு நன்கு திட்டமிடப்பட வேண்டும். மீண்டும் ஒரு அகதிச் சமூகம் உருவாக்கும் வகையில்



படிப்பகம்

padippakam



திட்டங்கள் இருக்கக் கூடாது. குடியேற்றத் திட்டங்கள் ஒவ்வொன்றும் மாதிரிக் கிராமங்களாக இருக்க வேண்டும். அதன் மூலம் வடமாகாண முஸ்லிம்களின் அரசியல், பொருளாதாரம் கலாச்சாரம் என்பன பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் அங்கும் இங்குமாக சிதறடிக்கப்படக் கூடாது. 11.10.1994, வீரகேசரியில் வெளியான அமைச்சர் அஷ்ரப் அவர்களுடைய அறிக்கைக்கு அமைய தனியார் மற்றும் அரச காணிகளில் நிறுவப்படும் மாதிரிக் கிராமங்கள் பாடசாலை, தபாற்கந்தோர், வைத்தியசாலை உட்பட சகல வசதிகளும் கொண்டதாக அமைய வேண்டும்.

அதற்கு முன் உடனடியாக கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஒன்று உண்டு. அது தான் அகதிகளின் தொழில் பிரச்சினை. முஸ்லிம்கள் வெளியேற்றப்படும் போது அவர்கள் 200 ரூபா பணமே கொண்டு செல்ல புலிகளால் அனுமதிக் கப்பட்டனர்.. வடமாகாண முஸ்லிம்கள் வர்த்தகர்கள் என்பதால் அவர்களால் முதல் இல்லாமல் சுயமாக ஒரு தொழிலைச் செய்ய முடியாமல் தொழிலின்றி உள்ளார்கள். எனவே அவர்களுக்கு தொழில் செய்வதற்கு ஆகக் குறைந்தது 50,000ஆயிரம் ரூபாயாவது வழங்கப்பட வேண்டும். முன்னைய ஆட்சியாளர்களைப் போல் இந்த விடயத்தில் புதிய ஆட்சியாளர்கள் இருக்க மாட்டார்கள் என்பதே எமது எண்ணமாகும். மேலும் தற்போது வழங்கப்பட்டிருக்கும் ஆசிரியர் மற்றும் இலிகிதர் வேலை வாய்ப்புகளில் வடமாகாண முஸ்லிம்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் அமைச்சர் அஷ்ரப், அவர்களும் பொது ஜன ஐக்கிய முன்னனி முஸ்லிம் பிரிவு அமைச்சர்களான ஜனாப் பௌஸி, ஜனாப் அலவி மௌலானா ஆகியோர் ஒன்று பட்டு குரல் கொடுக்க வேண்டும். போட்டியின்றி தெரிவு செய்யப்படவுள்ள 4000 தமிழ் மொழி மூலமான ஆசிரியர்களுக்கும் மற்றும் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படவுள்ள 1000 ஆசிரியர்களுக்கும் தகமையுடைய வடமாகாண முஸ்லிம்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட முடியும். மேலும் சமூர்த்தி திட்டம் மூலம் 23000 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப் படவுள்ளது. வடமாகாண முஸ்லிம்கள் 100 பேருக்காவது சமூர்த்தி திட்டம் மூலமான வேலைவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் மேற்கூறப்பட்ட அமைச்சர்கள் ஒன்றுபட்டு உறுதியுடன் செயற்பட வேண்டும். முன்னைய ஆட்சியாளர்களுடன் இருந்த ஊமையர்கள் போல் இனிமேல் எந்த முஸ்லிம் அமைச்சரும் இருக்கக் கூடாது என்பது தான் எமது பேரவா.

## வாசகர்கள் கவனத்திற்கு

கட்டுரைகள், கதைகள், கவிதைகள் போன்ற ஆக்கங்களும், மற்றும் கடிதங்களும் எழுதும் போதும் அகதிகளாயின் தங்களுடைய சொந்த ஊர் முகவரியையும், தற்போதைய முகவரியையும் குறிப்பிட வேண்டும். முகவரியில்லாத படைப்புக்கள் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது.

## 'அகதி'யின் வேண்டுகோள்

அகதி இதழ் தங்களுக்குக் கிடைப்ப தில்லையெனப் பலரும் கவலை தெரிவித்துள்ளனர். 'அகதி' இதழ் கிடைக்கப்பெறாத பகுதிகளைச் சேர்ந்த வாசகர்கள் சந்தா அனுப்புவதன் மூலம் 'அகதி' யின் வளர்ச்சிக்கு உதவுவதுடன், கிரமமாக பெற்றுக் கொள்ளவும் முடியும்.



படிப்பகம்

padippakam



# நிருவாகச் சிக்கலால் அல்லலுறும் அகதி இளைஞர்கள்!

(மு. றயீசுத்தீன், சிலாவத்துறை)

1990ம் ஆண்டு வட பகுதி முஸ்லிம்கள் அகதிகளாக வெளியேற்றப்பட்டது முதல், அவர்களது கல்வி, பயிற்சி நெறி அதனைத் தொடர்ந்த வேலைவாய்ப்பு என்பவற்றில் பாரிய பிரச்சினை எதிர் நோக்கப்பட்டு வருகிறது. தனி மனிதனின் பொருளாதார நோக்கு என்பதால் பலரின் கவனம் இதன்பால் ஈர்க்கப்பட வில்லை. அகதி முஸ்லிம்களின் தேவை அல்லது சேவை என வரும் போதுதான், அந்த சமூகத்தையே பாதித்து வரும் வேலை வாய்ப்புகளில் வீழ்ச்சியை எதிர் நோக்கி வரும் இப்பாரிய சிக்கலைக் காண முடிகிறது.

படித்து விட்டு வேலையின்றி இருக்கும் அகதி இளைஞர்கள் கடந்த 5 வருட காலமாக அரசாங்க வேலைவாய்ப்புகளின் போது மிகவும் பாராதூரமான முறையில் புறக்கணிப்புக் குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

1990 ஆண்டு இந்த முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபின் மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் மட்டும் மிகச் சொற்ப அளவினர் மீளக் குடியேறியுள்ளனர் இராணுவப் பாதுகாப்பில் எந்நேரமும் அவர்கள் பயங்கர வாத சூழலிலேயே வாழ்ந்து வருகின்றனர். ஏனைய அனைத்து வட பகுதி முஸ்லிம்களும் புத்தளம், அநுராதபுரம், குருநாகல் , கொழும்பு போன்ற பல்வேறு மாவட்டங்களிலுள்ள தனியார் காணிகளிலும், வாடகை வீடுகளிலும் கடந்த 5 வருடங்களாக எவ்வளவோ துன்ப துயரங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

கையால் பிச்சையெடுப்பதை விடுத்து, பையில் எடுக்குமாப்போல் அகதிகளுக்கான புனர் வாழ்வுத் திட்டமும் ஏற்படுத் தப்பட்டுள்ளது. இந்நிலையில் வேலை வாய்ப்புத் துறையில் அவர்களாகத் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளவும் முடியாதுள்ளது அரசாங்க வேலைவாய்ப்புகளின் போது, ஏனைய பயிற்சி நெறிகளின் போதும் இவர்கள் அப்புறப்படுத்தப்படும் விதம் விசித்திரமாகவே இருக்கிறது.

அரசாங்க சேவை, கல்விச் சேவை வெற்றிடங்கள் நிரப்பப் படும் போது நிரந்தர வதிவிட மாவட்டத்தைச் சேர்ந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆனல் தற்போது இடம் பெயர்ந்து வாழ்ந்து வரும் மாவட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் அகதி இளைஞர்கள் மேற்படி காரணங் காட்டப பட்டு நியமனத் தகுதி இழக்கின்றனர். அதேவேளை தாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வந்த தமது சொந்த மாவட்டத்திற்கென விண்ணப்பிப் போருக்கு 'அங்கு மக்களில்லை, நிருவாக மில்லை' என்ற காரணங் காட்டப் பட்டு நியமனமேதும் வழங்கப்படுவதில்லை. இந்நிலையில் தமது நிரந்தர மாவட்டத்திலும் நியமனங் கிடைக்கப் பெறாது, தற்போது அகதியாக வாழும் மாவட்டத்திலும் நியமனம் பெற்றுக் கொள்ள முடியாது. இரண்டும் கெட்ட நிலையில் இவ்வகதி முஸ்லிம் இளைஞர்கள் உள்ளனர்

மேலும் தற்போது அரசாங்க வேலை வாய்ப்பின் போது சொத்துகள் இழந் தோருக்கென விஷேட சலுகைப் புள்ளிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் இவ்வகதி முஸ்லிம்களுக்கு அச்சலுகை கூட



படிப்பகம்

padippakam



கிடைப்பதில்லை. ஏனெனில் , சொத்துகள் இழந்ததற்கான ஆதாரம், ஆவணங்கள் கேட்கப்படும் போது அவற்றைக் காட்ட முடியாத நிலையில் உள்ளது. சொத்துகள் இருந்ததற்கான அல்லது இழந்ததற்கான ஆவணங்களை எடுத்து வரவோ பொலீஸில் முறைப்பாடு செய்யவோ அந்த 90 ஒக்டோபரில் இந்த முஸ்லிம்களின் நிலை இருக்க வில்லை.

உண்மையில் அனைத்துச் சொத்து சுகங்களை இழந்து வந்தவர்கள் இந்த வட பகுதி முஸ்லிம்கள் என்பது நாடறிந்த உண்மை. இதனை யாரும் மறுத்ததற்கில்லை. புத்தளம் மாவட்டத்தில் காட்சியளிக்கும் அகதி முகாம்கள் இதற்குத் தக்க சாட்சியாகும் இவ்வாறிருக்க அவர்களிடம் பாதிக்கப்பட்டது பற்றிய ஆதாரங்கள் கேட்பது எவ்வளவு தூரம் பொருத்தம் என்பது புரியவில்லை.

மற்றும் இடம் பெயர்ந்து வாழும் முஸ்லிம் இளைஞர்கள் நாட்டின் இளைஞர் செயற்பாடுகளின் போது ஒதுக்கப் பட்டுள்ளனர். இளைஞர் சம்மந்தமான பயிற்சி நெறிகள் கருத்தரங்குகள் விளையாட்டுகள், ஒன்று கூடல்கள் போன்ற வற்றில் இவர்கள் கவனிக்கப்படுவதில்லை. அகதி முகாம் களிலுள்ள இளைஞர்கள் ஒன்றிணைத்து, அவர்களின் ஆற்றல், ஆளுமைகளை விருத்தி செய்யவென இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் வட பகுதி முஸ்லிம் இளைஞர்களின் வேலைவாய்ப்பு , ஏனைய தேவைகள் சம்மந்தமான சில கோரிக்கைகள் முன் வைக்கப்படுகின்றன

* தற்போது அகதிகளாக வாழ்ந்து வரும் மாவட்டங்களுக்கு விண்ணப்பிப் போருக்கு, அந்தந்த மாவட்டங் களிலேயே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் இது அக்குறிப்பிட்ட மாவட்டங்களில் வாழும் அகதிகளின் செறிவுக் கேற்பவும் செய்யலாம்
* அனைத்து சொத்துகளையும் இழந்த வர்கள் இந்த வட பகுதி முஸ்லிம்கள் என உறுதிப்படுத்தப்பட்டு வேலை வாய்ப்புகளில் வழங்கப்படும் விஷேட புள்ளிகள் கிடைக்க வேண்டும்.
* இளைஞர்களின் ஆளுமைகளை வளர்க்கவென நாடு பூராவும் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வரும் இளைஞர் சேவைகள் மன்றம் இந்த இளைஞர்களையும் தன் சேவையில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

எனவே அகதிகள் நலனில் அக்கறை கொண்டவர்கள் இது விடயமாக உடனடி கவனமெடுக்க வேண்டும்.

### இலவுகாத்த கிளியின் கதை

வடபகுதி முஸ்லிம் அரச ஊழியர்களுக்கு எவ்வித நஷ்ட ஈட்டு நிவாரணமும் கிடைக்காமல், இலங்கையின் பல பாகங்களிலும் பரிதாப நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு நஷ்ட ஈட்டு நிவாரணத்தில் 50 வீதம் பெற்றுத் தருவதாகவும், 1995ஆம் ஆண்டுக்கான புதிய வரவு–செலவுத் திட்டத்திலும் இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் தெரிவிக்கப்பட்ட பொழுதிலும் இன்று வரை அதற்கான முன்னேற்றப்பாடுகள் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. இவர்களின் நஷ்டஈட்டு விவகாரம் இலவு காத்த கிளியின் கதைபோல ஆகி விடாமல் இருக்க வேண்டும்.



படிப்பகம்

padippakam



# செய்திச் சிதறல்கள்

**1. நாச்சியார் தீவு முகாமில் தீ விபத்து**

அநுராதபுரம் நாச்சியார்தீவு வாழும் தோட்டம் சியாரத்து வளவில் கடந்த ஜுன் மாதத்தில் இடம் பெற்ற திடீர் தீவிபத்தின் காரணமாக சுமார் 13 ஓலைக்கொட்டில்கள் எரிந்து சாம்பலாகியது.

இம்முகாம் எரிந்ததனால் பாதிக்கப் பட்டவர்கள் முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்கள்.

**2. புத்தளத்தில் புனர்வாழ்வுச் செயலகம்**

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் பிராந்திய நிலையமொன்றை புத்தளத்தில், அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் கடந்த ஜுலை 20ம் திகதி திறந்து வைத்தார். இச்செயலகத்தின் மூலமாக புத்தள மாவட்டத்திலுள்ள 189 அகதி முகாம்களில் வாழும் 50 ஆயிரத்திற்கும் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை பராமரிப்பதற்கே இத்தகைய பிராந்திய செயலகம் திறக்கப்பட்டதாக புனர்வாழ்வு அமைச்சின் அறிக்கையொன்று கூறுகிறது.

**3. அகதிகளுக்கு 'உலக உணவுத்திட்டம்' உணவு வழங்கும்**

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் வசித்து வரும் அகதிகளுக்கு, மேலும் ஒருவருடத்துக்கு உணவுப் பொருட்களை வழங்குவதற்கு ஐ.நா. உலக உணவுத்திட்டம் இணக்கம் தெரிவித்துள்ளது. இதற்காக, உலக உணவுத்திட்டம் 163 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளது.

இதன்படி 1996ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை உலக உணவுத்திட்டத்தின் உதவி நீடிக்குமென கூறப்பட்டுள்ளது.

**4. மன்னார், வவுனியா மாவட்டத்தில் அகதிகளுக்கு தொழிற்பயிற்சி**

வவுனியா, மற்றும் மன்னார் மாவட்டங்களிலுள்ள அகதி இளைஞர்கள் யுவதிகளுக்கான தொழிற் பயிற்சி நிலையமொன்றை அமைப்பதற்காக விஞ்ஞான கைத்தொழில் மனித வள அபிவிருத்தி பிரதி அமைச்சர் எஸ்.எஸ்.எம். அபூபக்கர் தன்னுடைய பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து 5,00,000 ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

**5. புத்தளம் யாழ் அகதிகளுக்கு 15 லட்சம் ரூபா ஒதுக்கீடு**

புத்தளம் மாவட்டத்திலுள்ள 15, யாழ். அகதி முகாம்களுக்கு தண்ணீர், மின் இணைப்புக்கு 15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஐ.எம்.இஸ்யாஸ் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளார்.

**6. புத்தளத்தில் உப்பளம் முதலாவது முகாம் தீக்கிரை**

கடந்த ஜுலை மாதம் நடுப்பகுதியில் புத்தளம் உப்பளம் முதலாவது முகாம் தீக்கிரையானதால், 185 குடிசைகள் எரிந்து சாம்பலாகியது. இம்முகாமில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம்களே வாழ்ந்து வந்தனர்.

**7. 177 அகதி தம்பதியருக்கு உதவிகள்**

புத்தளம் மாவட்ட அகதி முகாமில் தங்கி உள்ளவர்களும் வட-கிழக்குப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து புதிய அரசு பதவியேற்ற பின் திருமணம் செய்தவர்களுமான 177 தம்பதியர் களுக்கு கடந்த ஜுலை மாதத்தில் இருபத்தைந் தாயிரம் பெறுமதியான பணத்திற்கான காசோலையும், பொருளும் வழங்கப்பட்டன.



படிப்பகம்

padippakam

# 'வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு'

# NORTHERN MUSLIMS' RIGHTS ORGANIZATION" (N.M.RO)

## பிரதான குறிக்கோள்

1. மீண்டும் பூர்வீகவிடத்தில் வாழும் உரிமை.
2. பலவந்தமாக வெளியேற்றப்பட்டதால் ஏற்பட்ட அசையும், அசையாத ஆவண இழப்பீடுகளை மீளப்பெறும் உரிமை.
3. மீளக் குடியேறும் வரை இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் பொழுது சகல வசதிகளையும் பெற்றுக் கொள்ளும் உரிமை.
4. வட மாகாணத்தில் மீளக்குடியேறும் போது அச்சமின்றி தனித்துவத் தோடும் பூரண பாதுகாப்புடனும் வாழும் அரசியல் உரிமை.

**மேற்படி குறிக்கோள்களை அடைவதற்காக பின்வரும் செயல் திட்டங்களை இவ்வமைப்பானது நடைமுறைப்படுத்தும் .**

1. வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் புள்ளிவிபரங்களைத் திரட்டுவது.
2. அவர்கள் மத்தியில் எதிர் காலத்தைப்பற்றிச் சிந்திக்கும் மனோநிலையை ஏற்படுத்துதல்.
3. இலங்கையில் வாழும் ஏனைய மக்கள் மத்தியிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் வடமாகாண முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியம் பற்றியும், அகதிகள் தொடர்பாகவும் அறிவை வழங்குதல்.
4. இந்நோக்கத்தை அடையும் பொருட்டு கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பத்திரிகையாளர் மாநாடுகள் போன்றவற்றை நடத்துதல். இவ்வகையான முயற்சிகளின் பிரதிபலன்களை பிரசுரங்களாக வெளியிடுதல்.
5. அரசியல் தீர்வொன்றிற்கு வடமாகாண முஸ்லிம்களின் அபிப்பிராயங்களை ஒன்று திரட்டி அதற்காகத் தயார்படுத்தல்
6. இந்தக் குறிக்கோளை அடைவதற்கு தேசிய சர்வதேச ரீதியில் பொது அபிப்பிராயத்தை ஏற்படுத்துதல் என்பனவாகும்.

இவ்வமைப்பில் அங்கம் வகித்து, தாயக மண்ணை மீட்பதற்கும், எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கும் தங்களது பங்களிப்பைச் செய்ய முன்வர விரும்புவோர் இதன் அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்கவும்
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**செயலாளர்,**

**வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு**

**15 ஏ, ரோகினி வீதி, வெள்ளவத்தை,**

**கொழும்பு - 06.**

படிப்பகம்

padippakam

දුරකථන : කාර්යාලය
தொலைபேசி : அலுவலகம்
Telephones : Office
422591
422592
422593

ෆැක්ස් අංකය
பக்ஸ்
Fax No. 541531

මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

තැපැල් හා විදුලි සංදේශ අමාත්‍යාංශය
ලෝටස් පාර
தபால், தொலைத்தொடர்பு அமைச்சு
லோட்டஸ் வீதி
MINISTRY OF POSTS & TELECOMMUNICATIONS
LOTUS ROAD

කොළඹ 1
கொழும்பு 1
Colombo 1

09.04.1995.

ஆசிரியர்,
"அகதி",
15ஏ, றோஉறினி வீதி,
வெள்ளவத்தை.

அன்புடையீர்,

தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட "அகதி" இதழ் 07 கிடைக்கப் பெற்றேன், நன்றிகள். உள்ளடக்க ஆக்கங்கள் எமது சமூகம் பற்றிய விரிவானதும் ஆழமானதுமான தகவல்களைக் கொண்டுள்ளமை . எமது மக்களின் யதார்த்த பூர்வமான நிலையை இன்றைய சமூகம் தெளிவாக உணர்ந்து கொள்ளக் கூடியதாக அமைந்துள்ளது.

தங்களது ஆக்கபூர்வமான இப்பணி தொடர நல் வாழ்த்துக்கள்.
நன்றி.

இப்படிக்கு.
இஸ்லாமிய சமூக சேவையில்,

எம்.எல்.ஏ.எம். உறிஸ்புல்லாஉற்
அஞ்சல் தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சர்.

... Posts and Telecommunications
Ministry of Posts and Telecommunications
LOTUS ROAD COLOMBO-01.

அகதி இதழ் 15A, ரோஹினி வீதி, கொழும்பு 6 வை சேர்ந்த முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பினரால் ஏ.ஜே. பிரிண்டர்ஸ் இல. 1B பீ.டி. சில்வா மாவத்தை, தெஹிவளையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்